பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 17 செவ்வாய்க்கிழமை 30.03.2021 கதிர் 145

**இது ரகசியம் அல்ல!**

‘கல்லுளி மங்கன் போன வழி காடு, மேடெல்லாம் தவிடுபொடி’ என்பார்கள். கோட்டா அரசு போகின்ற வழி எல்லாம் அப்படித் தான் போலும்.

எல்லாவிடயங்களையும்பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியுடன் ‘எடுத்தேன், கவிழ்த்தேன்’ பக்கம்02 »

# வாராந்தம் 250 இந்தியப் படகுகளுக்கு இங்கு மீன்பிடிக்கப் ‘பெர்மிட்’ திட்டம்!

## இலங்கை கொள்கையளவில் இணக்கம்

(ந.லோகதயாளன்)

கொழும்பு, மார்ச். 30

இலங்கைக் கடற்பகுதிக்குள் இந்திய மீனவர்கள் பெரும் எண்ணிக் கையில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான இந்திய மீன்பிடிப் படகுகளுக்கு கடும் நிபந்தனைகளுடன் கூடிய ‘பெர்மிட்’ (லைசென்ஸ்) அனுமதியுடன் வாராந்தம் இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கும் ஒரு மாற்றுத் திட்டம் குறித்து கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக அறியவருகின்றது. ☞2

### கட்சி உறுப்பினர் பதவி நீக்கம்;

## ரணில் உள்ளிட்ட ஐவருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐவருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் உறுப்பினர் கே.ஜி தம்மிக சந்திரரத்னவை கட்சியில் இருந்தும், மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கான தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே, ☞2

## வீதியில் லொறிச் சாரதியைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம்



மஹரகம பொலிஸ் பிரிவின் பிரதான வீதியில் லொறி சாரதியை தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அத்தோடு குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று ☞2

## இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி நாட்டையே கையளிக்கும் நடவடிக்கை!

### சீறுகின்றது இலங்கை மீனவர் சங்கம்

கொழும்பு, மார்ச். 30

இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதிப்பது இலங்கை நாட்டை இந்தியாவிடம் கையளிப்பது போன்றது எனச் சீறியிருக்கின்றது அகில இலங்கை மீனவர் சம்மேளனம்.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் அழைப்பாளர் ரத்ன கமகே கூறியவை வருமாறு:-

இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் எங்கள் நாட்டின் இறைமை, வளம், கடல் வளச் சூழல், சமுத்திரப் படுக்கை உட்பட அனைத்துமே பாதிப்புறும். அதனால் இத்திட்டத்துக்கு எதிராக நாம் முழு அளவில் தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

“மாதாந்தம் சுமார் 30 ஆயிரம் படகுகள் எமது எல்லைக்குள் அத்துமீறி நுழைக்கின்றன.

எங்கள் ☞2

## யாழில் 21 பேர் உட்பட வடக்கில் மேலும் 26 பேருக்கு கொரோனா

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 21 பேருக்கும், வவுனியா, முல்லைத்தீவில் தலா இருவருக்கும், கிளிநொச்சியில் ஒருவருக்கும் என மேலும் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 370 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 26 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ☞2

## வவுனியா வருகிறார் கோட்டா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மார்ச் 30

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ எதிர்வரும் 03 ஆம் திகதி (சனிக்கிழமை) வவுனியா பொபஸ்வேவா கிராமத்திற்கு வருகை தரவுள்ளார்.

ஜனாதிபதியின வாரம் ஒரு கிராமம் நிகழ்ச்சித் திட்டம் ☞2



## சு.கவின் தேவை இன்னும் உண்டு

### மைத்திரி அதிரடி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேவை இன்னும் நாட்டு மக்கள் மத்தியில் இருப்பதால், கட்சியை மேலும் பலம்மிக்கதாக முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திறமையான இளைஞர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் ☞2

## மேலும் ஐவர் மரணம்; கொரோனா காவு 566

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதுல்கோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதான ஆண் ஒருவரும், கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான ஆண் ஒருவரும், கொழும்பு – 15 ஐச் சேர்ந்த 45 வயதான ஆண் ஒருவரும், களுத்துறை தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான ஆண் ஒருவரும், கொழும்பு – 13 ஐச் சேர்ந்த 67 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு ☞2

## போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 34 பேர் கைது

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் இணைந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் உட்பட 34 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று குற்றத்தடுப்புப் பிரிவினர் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு ☞2

## ஈஸ்டர் தினத்தையொட்டி தேவாலயங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பணிப்புரை

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களின் பாதுகாப்பையும் பலப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், இவ்வாறு பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 263 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில், ஒவ்வொரு தேவாலயத்துக்கும் பொறுப்பான மதகுருவுடன் கலந்துரையாடி, பாதுகாப்பு ☞2

### அடிப்படைவாதத்தைப் போதிக்கும்

## இஸ்லாமிய போதகர்களை உடன் நாடு கடத்தவேண்டும்

### அரசிடம் கத்தோலிக்கச் சபை வலியுறுத்து

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான அடிப்படைவாத முஸ்லிம் குழுக்களை முற்றாகத் தடைசெய்வதுடன், அவற்றுடன் தொடர்புடைய வெளிநாட்டு அனுசரணையாளர்கள் மற்றும் அடிப்படைவாத போதனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை இலங்கையில் இருந்து உடனடியாக நாடு கடத்த ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றபாணியில்தான் முன்னெடுக்கின்றது அது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் - இருண்ட யுக வேளையில் - புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலம்பெயர் பிர முகர்கள் சுமார் ஐந்நூறுக்கும் அதிகமா னோரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டு, அத்தரப்புகள் எல்லாம் தடை செய்யப்படு கின்றன என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் அத்துடன் விடயம் கிடப்பில் போடப்பட்டமை மாதிரி விடப்பட்டது. அதற்கு மேல் பெரிய நடவடிக்கை ஒன்றையும் எடுப்பதற்கு ஆட்சித் தலைவர் மஹிந்தர் இடம் கொடுக்கவில்லை.

பின்னர் நல்லாட்சி அரசு வந்ததும், இந்தத் தடைகள், நெருக்குவாரங்கள் விலக்கப்பட்டன.

இப்போது, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியிருக்கின்றது. ஆனால் ஒரு விட யம். முன்னைய மஹிந்த அரசு மாதிரி, கோட்டா அரசு இருக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். இந்தத் தடை அறிவிக்கப்பட்டவுடனேயே அது தொடர் பில் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது அது.

டான், தொலைக்காட்சியில் பலருக்கும் அடிக்கடி மிகப் பரிச்சயமான அறிவிப்பாளர் /ஊடகவியலாளர்/நிகழ்ச்சி ஒருங்கிணைப் பாளர் சுலக்ஷன் நேற்று மூன்று மணி நேரம் கொழும்பில் புலனாய்வாளர்களி னால் குடையப்பட்டார். காரணத்துடன்தான்.

இப்போது தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள ஒருவர் சுலக்ஷனின் முகப்புத் தக நண்பர் குழாமில் ஒருவராம். அவ்வளவு தான். அதற்காகவே சுலக்ஷனைப் போட்டு நோண்டி நுங்கெடுத்திருக்கின்றார்கள்.

சுலக்ஷன், நான் ஏற்கனவே நான் குறிப்பிட்ட படி நன்கு முகம் பரிச்சயமான முன்னணி தொலைக்காட்சி நிகழ்ச்சி நெறிப்படுத்துநர். அப்படியானவருக்கு உலகின் பல பாகங்களில் இருந்தும் அவ ரது முகப்புத்தகத்துக்கு நட்பு இணைப்புக் கோரிக்கை வரும். அப்படி வரும் கோரிக் கைக்கு உரியவர் புலியா, சிங்கமா, தடை செய்யப்பட்ட பட்டியலில் இருப்பவரா என் றெல்லாம் பார்த்தா அவர் இணக்கம் தெரி விக்க முடியும்? நட்பு இணைப்புக்கு இணக் கம் தெரிவித்தமையைத் தவிர அவர் வேறு தவறு ஏதும் செய்யவில்லை.

ஆனால் தடை உத்தரவு நடைமுறைக்கு வந்ததும் சுலக்ஷன் மீதும் பாய்ச்சல். இனி, இப்படித் தடை செய்யப்பட்ட அமைப்புக ளைச் சேர்ந்தோர், தடை செய்யப்பட்டிய லில் இருப்போர் போன்றோரின் முகநூல் நண்பர்கள், வட்ஸ்அப் குரூப் நண்பர்கள், வைபர் குரூப் நண்பர்கள் எல்லோர்பாடும் சிக்கல்தான் போலும்.

என்ன செய்வது? கல்லுளி மங்கன் கைகளில் ஆட்சி அதிகாரமாகிய உளி. இனி என்ன, காடு, மேடெல்லாம் தவிடு பொடிதான்! அதனால் தவிர்க்க முடியாத இக்கட்டுத்தான் நமக்கு...!

★ ★ ★

வெறும் கை முழம் போடுவது போல பேசியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தாம் தலைமை வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுவாக முன்னோக் கிக் கொண்டு செல்லப் போகின்றார் என அவர் சூளுரைத்திருக்கின்றார்.

சு.கவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறி யிருக்கின்றார்.

அவர் கனவில் உளறுகின்றார் என்று தான் நினைக்க வேண்டியிருக்கின்றது.

2015 பொதுத் தேர்தலில் அவர் தலைமை தாங்கிய சு.கவுக்கு 96 எம். பிக்களை வழங்கினார் மக்கள். அந்த நாடா ளுமன்றம் கடந்த ஆண்டு முற்பகுதியில் கலைக்கப்பட்ட போது மைத்திரியின் தலை மையில் எஞ்சியிருந்த சு.கவின் எம்.பிக் கள் ஆகப் பதினாறு பேர் மட்டுமே.

இந்தத் தேர்தலின் பின்னர் சு.கவின் சார்பில் ஒரேயொரு எம்.பிதான். அதுவும் யாழ்.மாவட்டத்தில் இருந்து சு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கஜன் இராம நாதன் மட்டுமே.

இன்னும் 14 எம்.பிக்கள் இருக்கின் றனர். ஆனால் சு.கவினராக அல்லர். பொதுஜன பெரமுன சார்பில்.

சு.க. தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும், ஐ.தே.க. தலைவர் முன் னாள் பிரதமர் ரணிலும் Spent Force. இனிப் பயனற்றவர்கள்.

அதை உணர்ந்து தத்தமது கட்சிப் பதவிகள், பொறுப்பிலிருந்து அவர்கள் வெளியேறி, இடம் விட்டால்தான் வேறு யாரேனும் வந்து கட்சியை மீட்க முடியும். அதை விட்டு விட்டு இருவருமே கட்சித் தலைமையை விடாது இறுகப் பற்றிக் கொண்டு, கட்சியை வளர்ப்போம் என்று சூளுரைப்பது வெறும் பகல் கனவன்றி, களத்தில் நடக்கப்போவதல்ல.

– மின்னல் –

## சு.கவின் தேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியில் தொடர்ந்தும் இணைந்து வரு கின்றனர்.

தற்போது எமது கட்சிக்கு பொதுமக்கள் ஆதரவு பெருகி வருகின்றது.

நாட்டின் எதிர்கால அபிவிருத்தியைத் திட்டமிடும்போது, வறுமை ஒழிக்கும் வேலைத்திட்டம் முதன்மை பெற வேண்டும். அதுவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையாகும் – என்றார்.

## இந்திய மீனவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர்களுக்கு முதுகெலும்பு இல்லை. சட்டவிரோத அத்துமீறலைத் தடுத்து, அதற்கு எதிர்ப்பு நடவடிக்கை எடுப்பதை விடுத்து, அவர்களுக்கு உதவுவதற்கு நமது தலைவர்கள் முனைகின்றனர்." – என்று விமர்சித்தார் அவர். (உ)

## வவுனியா வருகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த வாரம் வவுனியா மாவட்டத்திலே இடம்பெறவுள்ளது. வவுனியா மாவட்டத் திட்டத்தில் நிகழ்வு வவுனியாவில் சாச்சையை ஏற்படுத்திய கிராமத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தம் முடிவுற்ற கையோடு 2009இல் மூவாயிரம் ஏக்கர் காடு அழிக் கப்பட்டு உருவான இந்தக் கிராமத்தில் தற் போது 9 ஆயிரம் மக்கள் உள்ளனர். வவு னியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதன் ஒரு பகுதி உள் அடங்குவதோடு அநுராதபுரம் மாவட்டத்தின் பதவியா பிரதேச செயலாளர் பிரிவுடனும் ஒரு பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசியல் ரீதியிலும் நிர்வாக ரீதியிலும் குளறுபடியான கிராமத்திற்கே எதிர்வரும் மூன்றாம் திகதி ஜனாதிபதி வருகை தரவுள்ளார்.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதுசெய்யப்பட்டவர்களில் 20 பொலிஸ் அதிகாரிகளும், 14 பிரஜைகளும் அடங்கு கின்றனர் எனவும் குற்றத்தடுப்புப் பிரிவி னர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளனர்.

இதில், பொலிஸ் சிறப்புப் பணிக்குழுவின் அதிகாரி மற்றும் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் உயர் அதிகாரி உட்பட ஐந்து பொலிஸ் அதிகாரிகளும், ஒன்பது பிரஜை களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள் ளனர் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடு பட்டுள்ள முக்கிய இரு குற்றவாளிகளான உதார சம்பத் மற்றும் படோவிட்ட லொகு ஆகியோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைதுசெய்வதற்கான பிடியாணை நீதி மன்ற உத்தரவின் பேரில் சர்வதேசப் பொலிஸாருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது எனவும் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலும் கூறியுள்ளனர்.

## யாழில் 21 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணியாளர்கள் 104 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 8 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

திருநெல்வேலி பொதுச்சந்தை தொகுதி கடைகளின் வியாபாரிகள் மற்றும் பணி யாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரி சோதனையில் 4 பேருக்குத் தொற்று உள் ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் நேரடித் தொடர்புடைய மூவ ருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை வைத்தி யசாலைகளின் தனிமைப்படுத்தல் விடுதி களில் நோய் அறிகுறிகளுடன் சேர்க்கப் பட்ட இருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும், முல்லைத் தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் கொரோனா நோய்த் தொற்று உள்ளமை நேற்றைய பி.சி.ஆர். பரிசோ தனையில் கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை 29ஆவது சத்திரச் சிகிச்சை விடுதி யில் சிகிச்சை பெற்று கடந்த வாரம் வீடு திரும்பிய கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

## வாராந்தம் 250...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, இழுவைமடித் தொழில் முறைமை (Bottom Trawling ) செய்யக் கூடாது என்ற கடும் நிபந்தனையுடன், கட்டணம் செலுத்தி பெர்மிட் பெற்று, இலங்கைக் கடற்பகுதிக்குள் இந்தியப் படகுகள் கடற் தொழில் செய்ய அனுமதிக்கப்படும்.

பெரிய, நீண்ட படகுகள் பாவிக்கக் கூடாது, சுமார் நாற்பது அடி வரை நீளமான படகு களே பயன்படுத்தப்பட முடியும், இரட்டை மடி வலைகளோ, ஊசி வலைகளோ பயன் படுத்த வேகூடாது, இலங்கைக் கடற்படையின் கண்காணிப்பிலேயே இலங்கைக் கடற்பகு தியில் தொழில் செய்ய முடியும் – போன்ற கடும் நிபந்தனைகளும் இத்திட்டத்தில் உள்ளடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்பகுதியில் இந்திய மீனவர்களை கடற்றொழில் செய்வதற்கு சட்டரீதியாக அனுமதிப்பது பற்றிய முறைமை தொடர்பில் இந்திய அரசுடன் இலங்கை அரசு தொடர்ந்து உரையாடி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய சமரசத் திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டிருக்கின்றமையை இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவும் கொழும்பு இணையம் ஒன் றுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

"எமது கடற்பகுதியில் இரண்டு பெரிய பிரச்சினைகள் உள்ளன. இந்திய மீனவர் கள் சட்டவிரோதமாக எமது கடல் எல்லைக் குள் நுழைக்கின்றனர். அடுத்தது – இழுவை மடி வலைகள் மூலம் நமது கடல் படுக்கை மட்டம் வரை கடல்வளத்தை அவர்கள் துடைத்து அள்ளிச் சென்று சூறையாடுகின்றார். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இந்திய மீனவர்களுக்கு லைசென்ஸ் (அனு மதி) அளிப்பது குறித்து யோசிக்கின் றோம்" – என்றார் கடற்றொழில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா.

"இந்தத் திட்டம் இந்திய அரசுடன் பேசப் படுகின்றது. இன்னும் சில மாதங்களில் அது நடைமுறைப்படுத்தப்படும் என எதிர் பார்க்கின்றோம்" – என்றும் அவர் கூறினார்.

முதல் கட்டத்தில் வாராந்தம் இருநூற் றியம்பது இந்தியப் படகுகளுக்கு அனுமதி அளிப்பது குறித்து சிந்திக்கப்படுவதாகத் தெரியவந்தது. (உ)

## வீதியில் லொறிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுப்பதற்கும், தண்டனை சட்டக்கோவையின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், நபர் ஒருவரைத் தாக்கும் காணொலி நேற்று சமூக வலைத்தளங்களில் வெளி யாகியிருந்தது. குறித்த காணொலி தொடர் பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டன.

அதற்கமைய மஹரகம பொலிஸ் பிரி வில் ஹைலெவல் வீதி – பன்னிபிட்டி பிர தேசத்தில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை இனங்காணப்பட் டுள்ளது.

மஹரகம பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத் தர் ஒருவரால் லொறி சாரதி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான லொறி சாரதி, மஹரகம பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோ தகர் மைத்திரிபாலவின் மீது மோதிச் சென்றுள்ளார்.

இதனால் காயமடைந்த அவர் களு போவிலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இதன் பின்னரே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சாரதி யைத் தாக்கியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் சாரதி தவறிழைத் திருந்தாலும் அவர் மீது தாக்குதல் மேற் கொள்ளப்படுகின்றமையை இலங்கை பொலிஸ் அனுமதிக்காது.

இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது செயற்பட வேண்டிய சட்டரீதியான வழி முறைகள் உள்ளன. அவற்றை மீறி இவ் வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது தவறான செயற்பாடாகும்.

எனவே, சாரதியைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழுவால் இது தொடர்பான மேலதிக விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு குறித்த பொலிஸ் உத்தியோ கத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், தண்டனை சட்டக்கோவை யின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## ரணில் உள்ளிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை இந்தத் தடை உத்தர வைப் பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான அடுத்த விசார ணையின்போது, நீதிமன்றத்தின் முன் ஆஜராகுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட ஐவருக்கும் நீதி வான் அழைப்பாணை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்தத் தீர்மானத் துக்கு முன்னர் தம்மிடம் நியாயமான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள வில்லை எனவும், இதன் விளைவாக தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என வும் கே.ஜி தம்மிக சந்திரரத்ன குறித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## மேலும் ஐவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 566 ஆக அதிகரித்துள்ளது.

## ஈஸ்டர் தினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பாடுகளைச் செய்யுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தின வணக்க வழிபாடுகளைத் தடைகள் இன்றி நிறைவேற்ற அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## இஸ்லாமிய போதகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்று கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் ஹாசீமுடன் வடக்கு, கிழக்கில் பல்வேறு வழிகளிலும் கொடுக்கல் – வாங்கல்களைப் பேணிய சகல நபர்கள் மற்றும் அமைப்புகள் தொடர் பாகவும் விரிவான விசாரணைகள் நடத் தப்பட வேண்டும் எனவும் கத்தோலிக்க திருச்சபை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க திருச் சபையின் 13 உறுப்பினர்களின் கையொப் பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யொன்றிலேயே இந்த விடயங்கள் குறிப் பிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் தடைப் பட்டியல் குறித்து கனேடிய எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி விசனம்

இலங்கைத்தீவில் முன்னர் இடம்பெற்ற மற்றும் தற்போதும் தொடரும் மனித உரிமை மீறல்களைப் புலம்பெயர் தமிழர்கள் – குறிப்பாகத் தமிழ்க் கனேடியர்களும், அமைப்புக்களும், விமர்சிக்காதிருக்க அவர்களை மௌனமாக்குவதே இலங்கை அரசு வெளியிட்ட தான்தோன்றித்தனமான தடைப் பட்டியலின் நோக்கம் என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி விமர்சித்துள்ளார்.

இலங்கை அரசு, ஐக்கிய நாடுகளின் 2012 ஆம் ஆண்டின் ஒழுங்குமுறை 1 இன் ஒழுங்குமுறை 4(7) இன் கீழ் பட்டியலிட்டோர் தொடர்பாக ஸ்காபறோ – ரூஜ் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு 2021 பெப்ரவரி 25 ஆந் திகதியிட்ட வர்த்தமானியில் பிரசுரித்த பட்டியலிடப்படுவோரின் பட்டியல் எனக்குத் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது”– என அந்த அறிக்கையில் கரி ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

இந்தப் பட்டியலில் தமிழ்க் கனேடிய அமைப்புக்கள் சிலவும், ஸ்காபறோ – ரூஜ் பார்க் தொகுதியில் வசிப்போர் உட்படத் தனிநபர்களின் பெயர்களும் அடங்கியுள்ளன. இலங்கைத் தீவில் முன்னர் இடம்பெற்ற மற்றும் தற்போதும் தொடரும் மனித உரிமை மீறல்களைப் புலம்பெயர் தமிழர்கள் – குறிப்பாகத் தமிழ்க் கனேடியர்களும், அமைப்புக்களும் – விமர்சிக்காதிருக்க அவர்களை மௌனமாக்குவதே இந்தத் தான்தோன்றித்தனமான பட்டியலின் நோக்கம்.

இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதுடன், பட்டியலில் இருப்போரின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் இடருக்குள்ளாக்குகிறது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் முன்னைய மற்றும் தொடரும் மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை வழங்கத் தவறியமைக்காக இலங்கையைக் கவனத்தில்



கொண்டிருப்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அறிவித்த ஒருசில நாள்களில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டமை தற்செயலானதல்ல.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் ஆயுதப்போரின் முடிவின்போது வகித்த பங்குக்காகப் போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரட்ன என்பவர் இந்தப் பட்டியலிடுதலை செயற்படுத்தியமை முரண்நகையாக அமைகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடைந்த தோல்வியில் இருந்து கவனத்தைத் திசைதிருப்புவதற்கான இலங்கை அரசின் தீயநோக்குள்ள செயலாக இது அமைகிறது. மாற்றுக் கருத்துக் கொண்டோருக்கு எதிரான இந்த நடவடிக்கை நேர்மையான சில தமிழ் அமைப்புக்களையும், தமிழ்க் கனேடியர்களையும் களங்கப்படுத்துவது வருத்தமளிக்கிறது. பட்டியலிட்ட நடவடிக்கையை முற்றாக மீளப்பெறுமாறு நான் வலியுறுத்துவதுடன், பட்டியலிடப்பட்டோரின் இலங்கைத் தீவில் வசிக்கும் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கையிடம் கோருகிறேன்.

பட்டியலிடப்பட்டமையால் பாதிக்கப்பட்ட அனைவரிடமும் இலங்கை மன்னிப்புக் கோருவதும் அவசியமானது எனவும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கரி ஆனந்தசங்கரி விமர்சித்துள்ளார்.

## கட்டுநாயக்க பி.சி.ஆர். ஆய்வகத்தை தனியார் மயமாக்கும் திட்டம் இல்லை

### பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பி.சி.ஆர். ஆய்வகத்தை தனியார் மயமாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் கூறுகின்றது.

சுகாதார வல்லுநர்கள் அமைப்பால் முன்வைக்கப்பட்ட குறித்த குற்றச்சாட்டுக்கள் தவறானவை என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்தார்.

இந்த குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தை சங்கடப்படுத்த எதிர்க்கட்சிகளால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு தவறான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும் என்றும் அவர் கூறினார்.

கொரோனாத் தொற்று காரணமாக விமான நிலையம் மூடப்பட்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறித்த பி.சி.ஆர். ஆய்வகம் நிறுவப்பட்டது என அமைச்சர் பிரசன்னரணதுங்க குறிப்பிட்டார்.

விமான நிலையம் மூடப்பட்ட போதிலும், இலங்கையர்களைத் திருப்பி அனுப்ப அரசாங்கம் முடிவு செய்தபோது, அங்கு வரும் பயணிகளுக்குப் பரிசோதனைகளை மேற்கொள்ள குறித்த ஆய்வகம் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மினுவாங்கொடையில் கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை ஏற்பட்டபோது கம்பஹா உள்ளிட்ட நாட்டின் பலபகுதிகளில் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கை குறித்த ஆய்வகத்தின் ஊடாக வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

## புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் தேங்காயெண்ணெயில் உள்ளமை உறுதி

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகள் அனைத்தும் தரமற்றவை என இலங்கை தரச்சான்றுகள் நிறுவகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய எப்லடொக்சின் காசினோஜென் என்ற இரசாயனம் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் குறித்த இரசாயனம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதென அந்த நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதிபடுத்தியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அவற்றை முழுமையாக நிராகரிப்பதாகவும் இலங்கை தரச்சான்று நிறுவகம் தெரிவித்துள்ளது.

எனவே, தரச்சான்று நிறுவகத்தின் பரிசோதனைகள் நிறைவடையும் வரையில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையிடம் உள்ள தேங்காய் எண்ணெயை மீள் ஏற்றுமதி செய்யவும் உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்

## கொள்ளை, திருட்டுகள் அதிகரிக்கலாம் வீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பல குற்றச் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புள்ளது.

எனவே கொள்ளை, திருட்டு சம்பவர்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தமிழ் – சிங்கள புதுவருட கொண்டாட்டங்களின் போது , திட்டமிட்ட குழுவினர் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் பல்வேறு கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இத்தகைய குற்றச் செயற்பாடுகள் தற்போதும் பதிவாகி வருகின்ற நிலையில் அவை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது.

தங்கச் சங்கிலி, வாகனங்கள் கொள்ளை, தங்க நகை விற்பனை நிலையங்கள் மற் றும் நிதி நிலையங்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது.

அதனால் பொது மக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இதன்போது வீட்டை விட்டு வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வீட்டின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

சொந்த வாகனங்களில் செல்பவர்கள், வாகனங்களை நிறுத்தி வைக்கும் போது அதன் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

வங்கிகள் உள்ளிட்ட நிதி நிலையங்களில் பணத்தை வைப்பிலடச் செல்பவர்கள், தங்களைச் சுற்றியுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், தங்களிடமுள்ள பணத்தை பாதுகாப்புடன் வங்கிக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

இதேவேளை வர்த்தக நிலையங்கள் அருகில் காணப்படும் ஏனைய வர்த்தக நிலையங்களுடன் தொடர்பை வைத்துக் கொள்வதுடன், ஏதேனும் அனர்த்தம் நிகழ்ந்தால் உடனே அதனை ஏனைய வர்த்தக நிலையங்களும் அறிந்துக் கொள்வதற்காக திட்டமொன்றைத் தயாரித்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில் வர்த்தக நிலையங்கள், நிதி நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் இவ்வாறான நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டால் அது தொடர்பில் தெரியப்படுத்துவதற்காக , அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் அவசர அழைப்பு பிரிவின் இலக்கங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

## தவக்காலச் சிந்தனை



## ஏற்றுவாழும் மனப்பான்மையை வளர்ப்போம்!

கூட இருப்பவர்கள், வசதி வாய்ப்புக்களை பகிர்ந்து அனுபவிப்பவர்கள், அரசியல் குடும்ப உறவுகள், தொழில் நிலைகளில் சக நண்பர்களானவர்கள் எல்லோரும் எம்முடன் இருப்பார்கள் என்பதெல்லாம் காலத்துக்கு காலம் சிறு சம்வங்களாலே பிரிவு ஏற்படும்போது தாங்க முடியா துயரப்படுகிறோம்.

சேர்ந்திருப்போரை நம்ப முடியாது வசதி வாய்ப்புக்களுக்காக, பதவிக்காக, பணத்துக்காக பாதை மாறும் கூட்டங்களும் இருந்த இடத்தை திட்டத்தீர்க்கும் மனப்பாங்குகள் அரசியலிலும் மத நிறுவனங்களிலும் தம்மை பெருமைப்படுத்துவதாக எண்ணி விமர்சனம் செய்வோரை காணும் நிலை இன்றும் தொடர்கிறது. இது போலவே இறுதிவரை உம்மோடுதான் இருப்பேன் என உரத்து கூறிய சீமோன் பேதுறுவை பார்த்து சொன்னார் என்னைப் பின் தொடர்ந்து வர இப்போது உன்னால் முடியாது என்றார். ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன். என்றார்.

அவரைப் பார்த்து “எனக்காக உயிரையும் கொடுப்பாயோ நீ மும்முறை என்னை மறுதலிக்கு முன் சேவல் கூவாது என உறுதியாக உனக்கு சொல்கிறேன்” என்றார். சேர்ந்து இருந்தவர்களே ஒருவர் மறுதலிக்கவும், ஒருவர் காட்டிக் கொடுக்கவும் முனைந்தார்கள். அவர்களின் மன பலவீனத்தை உணர மறுக்கிறார்கள். தவறுகளை ஏற்க மறுப்பதை விட மனம் மாறும் மனித மனங்களாக மாறுவோர் மன்னிப்பை ஏற்றுக் கொள்வதால் விலக்கப்பட்ட கல்வேலி. மூலைக்கல்லாக திருச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இராயப்பரே சாட்சியாகிறார்கள்.

இயேசுவை மறுப்பவர்களும், மதம் மாறுவோரும் மனம் தளர்ந்து போவோரும் குடும்ப உறுப்பினரிடையேயும் தம்மை பெருமையாக்கி பிறரை தூற்றி பகையை வளர்ப்பவராகவும் மாற்றம் பெறுவதை காண்கிறோம். இது மன மாற்றத்தின் தவக்காலம் பிறர் குறைகளை மறந்து மன்னித்து ஏற்று வாழும் மனப் பக்குவத்தில் இறை இல்லம் நாடுவோம்.

- யோசப்பாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கோட்டாபயவின் பதிலடிக்கு இந்தியாவின் எதிர்வினை

பூடகமான சொல்லாடல்களில் அறிக்கைப் போர் நடத்துவது தான் சர்வதேச இராஜதந்திரம்.

இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியாவுக்கு சமதையான நாடு, அதற்குப் பக்கத்தில் உள்ள தமது குட்டித் தீவான இலங்கை என்று நினைத்துக் கொண்டு பட்டையைக் கிளப்பியிருக்கின்றார் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இலங்கை விவகாரத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்தியா தெரிவித்த கருத்து – அடுத்தடுத்து இரண்டு தடவைகள் வெளியிட்ட ராஜதந்திர சமன்பாடு – மிகவும் ஆழமானது. அர்த்தங்கள் நிறைந்தது.

அதற்கு அதே பாணியில் பதிலடி கொடுக்க முற்பட்டிருக்கின்றார் இலங்கை அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ. அதுவும் ஜெனிவா மாநாடு முடிந்த கையோடு.

'சொல்லுக்குச் சொல், பல்லுக்குப் பல்!' என்ற இந்த இராஜதந்திரம் இலங்கைக்கு நல்லதல்ல என்பதுதான் எமது கணிப்பு. இந்த அணுகுமுறை – இப்பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியுடன், இப்பிராந்தியத்தின் குட்டி நாடு ஒன்று – அதுவும் அயலில் மிக நெருக்கமான ஒரே நாடாகப் பரந்து விரிந்த கிடக்கும் பாரதத்துடன் – முரண்டு பிடித்து, முறுகி நின்று, முரண்படுவது நல்லதற்கல்ல என்பது மட்டும் நிச்சயம்.

ஜெனிவாவில் இந்தியா குறிப்பிட்ட கருத்து, மென்மையான சொல்லாடல்களில் ஆழமான விடயங்களைக் கொண்டது.

இலங்கையில் தமிழர்களின் நீதியான, நியாயமான, கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவதில்தான் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடும் இறைமையும் தங்கியுள்ளது என்று ஜெனிவாவில் அப்பட்டமாக இந்தியா கூறியமை கொழும்பு ஒரு நல்ல சூடு.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பார்கள். அது நல்ல மாட்டுக்குத் தான். பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி கொண்ட விலங்குக்கு அல்ல என்பதை அந்த அறிவிப்புக்கு எதிரான கொழும்பின் தற்போதைய பதிலடி நடவடிக்கை நிரூபித்து நிற்கின்றது.

இலங்கையில் தமிழர்களுக்கு நியாயமான அதிகாரங்களைப் பகிர்ந்தால் மட்டுமே இலங்கையின் ஐக்கியமும், ஒருமைப்பாடும், இறைமையும் காக்கப்படும் என்பதுதான் ஜெனிவாவில் இந்தியா பிரதிபலித்த ஒரே நிலைப்பாடு. சமன்பாடு. அதன் அர்த்தத்தை இப்பத்தியில் ஏற்கனவே விலாவாரியாக விளக்கியிருக்கின்றோம்.

அப்படியானால், தமிழர்களுக்கு இலங்கையில் நியாயமான அதிகாரப் பகிர்வை வழங்க கொழும்பு மறுக்குமானால் இந்தியாவின் நிலைப்பாடு யாது என்ற கேள்வி எழுகின்றது.

அத்தகைய நிலையில் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு – அதாவது ஐக்கியம் – மற்றும் நாட்டின் இறைமை ஆகியன கேள்விக்குள்ளாகும் என்று இந்தியா கருதுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

அதற்கே இப்போது நேரடியாகப் பதிலும் பிரதிபலிப்பும் காட்டியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

*"ஜெனிவா சவாலை அச்சமின்றி நாம் முறியடிப்போம். அழுத்தத்துக்கு நாம் அடிபணிந்து போகமாட்டோம். நாங்கள் ஒரு சுயாதீன – சுதந்திர – தேசம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பலப் பரீட்சையில் நாம் பலிக்கடாவாக மாட்டோம்.*

*"இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்கின்ற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது புவிசார் நலன்களை மற்றைய நாடுகள் அடைய முயற்சிப்பதற்கு இடமளிக்க மாட்டோம்."* – என்று முழங்கியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

நாடுகளின் பெயர் குறிப்பிடாமல் – பூடகமான சொல்லாடல்களில் – இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டாலும் அது சுட்டும் செய்தி தெளிவானது. மிக உறுதியானது. இரு வேறு கருத்துகளுக்கு அப்பாற்பட்டது.

இந்தியாவுக்கு – அதன் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான ஆட்சிப் பீடத்துக்கு – பாரதப் பிரதமர் நரேந்திரமோடிக்கு – அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு – தெளிவானதும், திட்டவட்டமானதும், உறுதியானதும், பிசிறே இல்லாததுமான ஒரு கருத்தை அல்லது செய்தியை வெளிப்படுத்தியிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி.

*"நீங்கள் குறிப்பிடும் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வானது, உண்மையில் பிரிவினைக்கான அழைப்பு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லாதிக்க சக்திகளின் பலப் பரீட்சைக்கான களமாக தமிழர் தரப்பின் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை இந்தியா பயன்படுத்த விழைக்கின்றது. பிரிவினைக்கு வழி செய்கின்றது. அதற்கு இடம் கொடோம்.!"* – என்பதையே இப்போது திட்டவட்டமான பதிலடியாக முன்வைத்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய.

இதற்கு பாரதத்தின் – இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் – வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் – பிரதிபலிப்பு அல்லது பதில் என்ன?

## பாடசாலைகளின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர் அச்சமடையத் தேவையில்லை – பீரிஸ்



சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமையவே மேல் மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாகப் பெற்றோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் கல்வித்துறைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளது. சிறந்த திட்டமிடலுக்கு அமைய பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக ஆரம்பித்தோம்.

மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளை முழுமையாக ஆரம்பிப்பதில் பல காரணிகள் தடையாகக் காணப்பட்டன.

2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த 10 ஆம் திகதி நிறைவு பெற்றது. பரீட்சை முடிவடைந்தவுடன் அதாவது மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் மேல்மாகாண பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளை முழுமையாக ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை.

மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை கட்டம் கட்டமாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது இதற்கமைய மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் 5,11, மற்றும் 13 ஆகிய தர மாணவர்களின் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

1 தொடக்கம் 4 ஆம் தர மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளையும், 6 தொடக்கம் 10 மற்றும் 12 ஆகிய தர மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளையும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது.

ஏப்ரல் 19 ஆம் திகதி வரை காலம் தாழ்த்தல் அவசியமற்றது எனப் பேச்சின் ஊடாக தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேல்மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் அனைத்து தரங்களினதும் கற்றல் நடவடிக்கைகளை நேற்று ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது. இதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் அனுமதி வழங்கியுள்ளார்.

பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பாக அனைத்து பாடசாலைகளுக்கும் சுற்று நிரூபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளை முறையாகப் பின்பற்றுவது கட்டாயமாகும். விளையாட்டு போட்டிகளை நடத்தல், விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பான பேச்சு முன்னெடுக்கப்படுகிறது.

பாடசாலைகளின் சுகாதார பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பெற்றோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தை வெற்றி கொண்டு கல்வித்துறையை முன்னெடுத்து செல்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்

## வீதியைப் புனரமைக்குமாறு கோரி பண்டாரவளை மக்கள் போராட்டம்



*பண்டாரவளை - பூனாகலை பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.*

*ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தூல்கொல்லையில் இருந்து பேரணியாக பண்டாரவளை நகரத்தை நோக்கிச் சென்று தமது கோரிக்கைளை முன்வைத்து போராட்டத்தை மேற்கொண்டனர்.*

## ஒரு சமூக மாற்றத்தில் அரசியல் பங்களிப்பு மிகவும் பிரதானமானது – பிள்ளையான்

ஒரு சமூக மாற்றத்தில் அரசியல் பங்களிப்பு என்பது மிகவும் பிரதானமானது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் ஆலங்குளம் மற்றும் குகநேசபுரம் கிராமங்களுக்குச் சென்று அப்பகுதி மக்களை சந்தித்து அவர்களது தேவைகளை கேட்டறிந்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த யோகேஸ்வரன் ஐயாவின் சொந்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தான் பிறந்த பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு மூடுவிழா வைத்து விட்டு அரசியல் செய்வதில் என்ன பிரயோசனம்? இப்படிப்பட்டவர்கள்தான் கடந்த காலங்களில் மக்களின் வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்.

என்னை இல்லாமல் செய்ய வேண்டும், என்னை அழிக்க வேண்டும் என்று எதிரிகள் சிறைக்கு அனுப்பினார்கள். அவர்களது எண்ணங்கள் நிறைவேறாமல் போயின. என்னை இல்லாமல் செய்ய வேண்டும் என்று நினைக்கும் எதிரிகள் எனது எதிரிகள் அல்லர். எனது கொள்கைகளை ஏற்றுக்கொண்டு என்னோடு பயணிக்கும் உங்களது எதிரிகள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

ஆலம்குளம் மக்களது வரலாறு தெரியாது, அம்மக்கள் கடந்த காலங்களில் எவ்வாறு அடிபட்டார்கள் என்று தெரியாமலும், குகனேசபுரம் கிராமம் எப்படி உருவாக்கப்பட்டது, அந்த மக்களின் வரலாறு என்ன என்று எதுவுமே தெரியாமல் தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து போவோருக்கு இந்த பகுதி மக்களைப் பற்றி என்ன தெரியும்?

நான் தமிழன் என்பதற்காக எனக்கும் எனது பரம்பரைக்கும்தான் வாக்குப் போட வேண்டும் என்று திரிந்தவர்களுக்கு மத்தியில் எனது வளர்ச்சி அவர்களுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது. அதனால்தான் என்னை அழிக்க வேண்டும் என்று பார்க்கின்றார்கள். அவ்வாறானவர்கள் எனது எதிரி மாத்திரம் அல்லர் உங்களுக்கும் எதிரி தான் என்பதை மறந்து விடாதீர்கள்.– என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் ஒரு ஜனநாயக நாடுதானா?

# இது இலங்கைக்கும் முன்னுதாரணமாகுமா?





ந.லோகதயாளன்

மியன்மார் என்றால் தெரியாதவர்களிற்கும் பர்மா என்றவுடன் புரியும். இலங்கையைப் போல 1948 ஆம் ஆண்டே இந்த நாடும் சுதந்திரம் அடைந்தபோதும் மக்களின் ஜனநாயக ஆட்சியை விட இராணுவ ஆட்சியிலேயே இந்த நாடு அதிகம் இருக்கின்றது. அப்படி இருந்தபோதுதான் 1989ஆம் ஆண்டு பர்மாவின் பெயர் மியன்மாராக மாற்றப்பட்டது.

மியன்மாரில் இந்த வருடத்தின் தொடக்கத்தில் ஜனநாயக ரீதியில் அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு, அங்கு இராணுவம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி, அரசாங்கத்தை தன்வசமாக்கியது. அதாவது இராணுவ ஆட்சிக்குள் மியன்மார் அகப்பட்டுக்கொண்டது.

இது அநீதியானதென்றும், ஜனநாயகத்தை மீறிய செயற்பாடென்றும்,மியன்மார் நாட்டின் மக்கள், கிளர்ந்தெழுந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக, வீதிகளில் இறங்கி, தன்னெழுச்சியுடன் போராடி வருகிறார்கள். ஆனால் இராணுவமோ அநீதிக்கு எதிராகப் போராடும் மக்களின் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடுகளை மேற்கொண்டு வருகிறது. யார்,யார் வீதியில் இறங்கிப் போராடுகிறார்களோ அவர்கள் எல்லாம் சுட்டுப் பலியாக்கப்படுகிறார்கள். மியன்மாரில் இராணுவப் பூதங்கள் திறந்து விடப்பட்டுள்ளன.

இராணுவ ஆட்சி ஆரம்பமாகிய இரண்டு மாத இடைவெளிக்குள் நாளுக்கு நாள் நீதி, நியாயம் கேட்டெழும் மக்கள் கொல்லப்படுகின்றமை தொடர்ந்தபடியே இருக்கின்றது. தற்போது இது ஒரே நாளில் போராட்டக்காரர்கள் 114 பேர் சுட்டுக்கொலை செய்யப்படும் அளவிற்கு வளர்ந்துவிட்டது. மண்டேலா நகரில் வீட்டுச் சோதனை நடவடிக்கை ஒன்றின் போது, தந்தையை நோக்கி ஓடி வந்த ஏழு வயது சிறுமியை மியன்மார் பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர். குழந்தைகள் தம் தாய் தந்தையரை நோக்கி ஓடுதலும் குற்றமா? இதுவரை அறிந்த வகையில் 20 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் எனச் 'சேவ் த சில்ரன்' அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் செயலை கூறும்போது முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்குக் காவல் நின்ற சிறுவர்களை அழித்த செயலே ஞாபகம் வருகின்றது.



அதே போல மியன்மாரின் இரண்டாவது நகரமான மாண்டலேயில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு நாளுக்கு நாள் கொலைப்பட்டியல் நீண்டு செல்வதை வெளிவரும் செய்திகள் மூலம் அறிய முடிகிறது. வெளிவராத செய்திகள் இன்னும் எத்தனை, எத்தனையோ என்பதற்கு அப்பால் மியன்மாரில் இந்தக் கொடூரங்கள் உச்சம் பெற்றிருந்தபோதே ஐ.நா.மனித உரிமை பேரவை மாநாடும் இடம்பெற்றது.

அங்கே இதனை தடுக்க ஆக்க பூர்வமாக எதனையும் மேற்கொள்ளாதபோதும் அடுத்த ஆண்டு எத்தனைபேர். இறந்தனர்,அவர்கள் எப்படிச் சுடப்பட்டனர், இதற்கு ஆதாரம் உண்டா என நாள் கணக்கில் விவாதிக்கப் படக்கூடும்.

இந்தக் கோரத்தின் மத்தியிலும் மியன்மார் ஆயுதப்படை தினம் என்ற விழா ஒன்றும் கொண்டாடப்பட்டுள்ளது. அதற்கு முன்பதாக, ஆயுதப்படை தினத்தை கொண்டாடுவதற்கு எதிராக கிளர்ச்சி செய்தால், யாராக இருந்தாலும் அவர்களது தலையில் அல்லது பின்பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என இராணுவ எச்சரிக்கையும் விடுத்திருந்தது. ஆனால் மக்கள் அதனைப்பொருட்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டதாலேயே ஒரே நாளில் 114 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். தனது மக்களைப் பாதுகாக்க வேண்டிய இராணுவம் தனது மக்களையே பலியாடுகளாக வேட்டையாடும் பட்டியலில் இலங்கை இராணுவத்திடம் மியன்மார் இராணுவத்தினரும் பயிற்சி பெற்றார்களோ தெரியவில்லை.

மியன்மார் இராணுவம் மக்களைப் பாதுகாக்கும், ஜனநாயகத்திற்காகப் பாடுபடும் என்று ஜெனெரல் மின் ஆங் ஹேலிங் கூறியபோதிலும் அங்கே அவரின் கூற்றுக்கு முரண்பாடாக மிருகத்தனமான தாக்குதல் நடந்தது, நடக்கின்றது.

இராணுவ ஆட்சி என்றால், அது மக்களின் இறைமையை பறிக்கும் ஆட்சிதான். அது

மிருகத்தனமான கொடூர ஆட்சி என்பதற்கு மியன்மார் மட்டும் விதிவிலக்கா என்ன?

இலங்கைக்கும் மியன்மாருக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. மியன்மாரின் சமயம் தேரவாத பௌத்தம், அங்கும் ஒற்றையாட்சி குடியரசு, மக்கள் தொகையோ சுமார் 5 கோடியே 25 லட்சம். மொத்த நிலப்பரப்பு, 2 லட்சத்து 61 ஆயித்து 227 ச.கி.மீற்றர். சர்வதேச தொலைபேசி அழைப்புக் குறி 0095.., அதாவது இலங்கைக்கு அடுத்த குறியீடு.

மியன்மாரின் மேல் பர்மாவின் பியு நகர மாநிலங் களிலும், கீழ் பர்மாவில் மொன் இராச்சியத்திலும் முன்பு திபெத்திய – பர்மிய மொழியே பேசப்பட்டது. 9 ஆம் நூற்றாண்டில், பாமர் மக்கள் மேல் ஐராவதி பள்ளத்தாக்கிற்குள் நுழைந்ததன் பின் 1050களில் பகன் இராச்சியம் என ஒன்று உருவாக்கப்பட்டது. பின்னர் பருமிய மொழி, கலாசாரம் மற்றும் தேரவாத பௌத்தம் போன்றன மெல்ல மெல்லமாக அந்த நாட்டின் உரித்தானவையாக மாறின. மொங்கோலியப் படையெடுப்பின் காரணமாகவும், பல போரிடக் கூடிய மாநிலங்கள் எழுந்ததன் காரணமாகவும் பகன் இராச்சியம் முழுமையாக வீழ்ச்சியடைந்தது. 16 ஆம் நூற்றாண்டில், துங்கு வம்சத்தினால் மியன்மார் ஒன்றிணைக்கப்பட்டது.

தெற்காசியாவின் வரலாற்றில் குறுகிய காலத்திற்கு மிகப்பெரிய பேரரசாக எழுச்சி கண்டிருந்த மியன்மாரை 19 ஆம் நூற்றாண்டின் முற்காலத்தில் கொன்புங் வம்சம் நவீன மியன்மாரினை உள்ளடக்கிய ஒரு பகுதியையும், மணிப்பூர் மற்றும் அசாம் ஆகியவற்றையும் குறுகிய காலத்திற்கு ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகின்றது. மியன்மாரை பிரித்தானியர் மூன்று கட்டப் போர்களின் பின் 19 ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினர். அதன் பின்பு மியன்மார் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த போது பிரித்தானிய குடியேற்ற நாடாக மாறியது. 1948 இல் மியன்மார் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்று சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்டாலும் ஜனநாயக நாடாக இருந்த காலந்தில் 1962 இல் இராணுவ சர்வாதிகாரம் அங்கு ஏற்பட்டது.

மியன்மார் அல்லது பர்மாவிற்கு 1948இல் சுதந்திரம் கிடைத்ததாக கூறினாலும் அந்த நாட்டிற்கு இராணுவ ஆட்சி ஒன்றும் புதியது கிடையாது . அதாவது அந்த நாட்டின் 72 வருட காலத்தில் 20 வருடங்கள் கூட ஜனநாயக ஆட்சியில் மியன்மார் அல்லது பர்மா இருந்திருக்கவில்லை. 1962 இல் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம் 2011இல்தான் மக்கள் ஆட்சிக்கு வழி விட்டது . அதாவது 50 ஆண்டுகள் இராணுவத்தின் பிடியிலேயே நாடு இருந்தது. அதன் பின்பும் மியன்மாரிலும் ஆட்சி அதிகாரத்தில் இராணுவத்தின் கை ஓங்கியே காணப்பட்டது. ஏனெனில் 50 வருடத்தில் சகல துறைகளிலும் இராணுவம் அகலக் கால் பதித்து வேர் ஊன்றி நின்றது.

**இலங்கைக்கும் மியன்மாருக்கும் சில ஒற்றுமைகள் உண்டு. மியன்மாரின் சமயம் தேரவாத பௌத்தம், அங்கும் ஒற்றையாட்சி குடியரசு, மக்கள் தொகையோ சுமார் 5 கோடியே 25 லட்சம். மொத்த நிலப்பரப்பு, 2 லட்சத்து 61 ஆயித்து 227 ச.கி.மீற்றர். சர்வதேச தொலைபேசி அழைப்புக் குறி 0095.., அதாவது இலங்கைக்கு அடுத்த குறியீடு.**

இவ்வாறு 2011இல் மக்கள் ஆட்சிக்கு வழிவிட்ட இராணுவத்திற்கு இருப்புகொள்ள முடியவில்லை. இதனால் கடந்த ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய கட்சி ஆட்சி அமைக்க முனைந்தபோது தேர்தலில் முறைகேடு என இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது, இராணுவத் தரப்பினருக்கு ஆட்சியில் இருந்த ஆசையை அல்லது தாம் விரும்பியவர்கள் ஆட்சி பீடத்திற்கு வரவில்லை என்ற சீற்றத்தை எடுத்துக் காட்டுவதோடு அரசியல் எதிர்க் கட்சிகள் கூட இராணுவம் கூறும் குற்றச்சாட்டை அதிகம் உச்சரிக்கவில்லை என்பதும் ஆச்சரியமாகவே உள்ளது.

இவ்வாறு மியன்மாரில் இராணுவத்தை வளர்த்துவிட்டதன் விளைவை தற்போது அந்தநாடு அனுபவிக்கும் சமயம் இலங்கையில் இதுவரை இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் 28 பேர் அரச நிர்வாக இயந்திரத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது.

இங்கும் இன்னும் சில இராணுவ அதிகாரிகள் அரச பதவிகளை எதிர்பார்க்கின்றனர். அது மட்டுமன்றி எந்த நிர்வாகச் செயல்பாட்டிற்கும் இராணுவ அனுசரணை, இராணுவ ஒத்துழைப்பு என உட்புகுத்தியமையால் இராணுவம் வந்து கூறினால்தான் கட்டுப்படுவர் என்ற மனநிலை உருவாக்கப்பட முயற்சிக்கப்படுகின்றது.

அதேநேரம் மியன்மாரும் பௌத்த நாடுதான்.

இதனால் இலங்கையின எதிர்காலமும் எவ்வாறு அமையும் என்பது எதிர்கால அரசியல் வல்லுநர்களால் கூட ஊகிக்க முடியாத அளவிற்கு பரந்துவிட்டது. ஏனெனில் இன்று இலங்கை ஓர் ஜனநாயக சோசலிச குடியரசாக இயங்கினாலும் சிறிலங்கா, சி.லங்கா ஒரு புறமும், சிவில் ஆட்சி முறைமை இராணுவ ஆட்சி முறைமையை நோக்கியும் நகர்கின்றது எனப் பலரும் கூறுவது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




> உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் 12 சதவீதம் சூயஸ் கால்வாயில் தங்கி இருக்கிறது. அதில் எரிபொருள் முக்கியமானது. மனித முயற்சியால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெட்டப்பட்ட அந்தக் கால் வாயூடான கடற்போக்குவரத்து தடைப்படுவது நாளொன்றுக்கு 960 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வர்த்தகப் பொருள்களை முடக்குகின்றது

## முக்கிய பாதையில் அபூர்வ விபத்து!

க.குமாரதாஸன் (பாரிஸிலிருந்து)

# புயலில் சிக்கிய ராட்சதக் கப்பல் பக்கவாட்டில் திரும்பித் தரைதட்டி சூயஸ் கால்வாயை முடக்கியது!!

பிரான்ஸின் துளூசில் உள்ள CNES - Airbus விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்மதிப் படத்தையே அருகே காண்கின்றீர்கள்.

படத்தில் தெரிகின்ற பாரிய சரக்குக் கப்பல் (mega - container ship) சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கே – இடக்கு முடக்காக – கரைகளுக்கு இடையே சிக்கிக் கொண்டு கால்வாயை மூடி கடற்போக்குவரத்தை அடைத்தபடி நிற்கின்றது.

இதனால் உலகின் படு பிஸியான ஒடுங்கிய கடல் வழி தடுக்கப்பட்டிருப்பது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை உலுக்கி விட்டிருக்கிறது.

வீதியின் நடுவே விபத்து நடந்தால் வாகனங்கள் இருபுறமும் தடைப்பட்டு நிரையாக நிற்பது போல் 120 மைல் நீளமான கால்வாயைக் கடப்பதற்காக 206 கப்பல்கள் வரை இருபக்கமும் காத்து நிற்கின்றன. அவற்றில் 41 பாரிய கப்பல்களும் 21 மசகு எண்ணெய்த் தாங்கிகளும் அடங்கும். சில கப்பல்கள் திசைதிருப்பிவிடப்பட்டுநடுக்கடலில்நங்கூரமிட்டுள்ளன.

உலக கப்பல் போக்குவரத்து மார்க்கத்தின் மிக முக்கிய கேந்திரமான சூயஸ் கால்வாய் தடைப்பட்டிருப்பது பல பில்லியன் டொலர்கள் வர்த்தகத்தை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முடக்கி உள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலைகள் எகிறி உள்ளன.

### கப்பலுக்கு என்ன நடந்தது?

பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட எவர் கிவ்வின் (Ever Given) என்ற பெயர் கொண்ட கப்பலே இவ்வாறு சிக்கி உள்ளது. நான்கு உதைபந்தாட்டத் திடல்களின் மொத்தப் பரப்பைக் கொண்ட உலகின் மிகப் பெரிய கொள்கலன் கப்பல்களில் ஒன்று அது. ஜப்பானிய உரிமையாளர் ஒருவருக்குச் சொந்தமானது. தாய்வானின் 'எவகிறீன் மரைன்' (Evergreen Marine) நிறுவனத்தால் இயக்கப்படுகிறது. 20 மாடிக் கட்டடத்தின் உயரத்தை ஒத்த 400 மீற்றர்கள் (1,400 அடி) நீளமும் 59 மீற்றர் அகலமும் கொண்டது.

200 ஆயிரம் தொன் நிறையுடைய அக் கப்பலில் 20 ஆயிரம் பாரிய கொள்கலன்கள் ஏற்றப்பட்டுள்ளன.

சீனாவில் இருந்து நெதர்லாந்தின் றொட்டடாம் (Rotterdam) துறைமுகத்துக்குச் சென்றுகொண்டிருந்த வழியில் அது செங்கடல் ஊடாக எகிப்து நாட்டின் சூயஸ் கால்வாயில் நுழைந்த சமயம் கடும் புயல் காற்றில் சிக்கியது என்று கூறப்படுகிறது. மணல் புழுதியுடன் கூடிய புயல் காற்று அந்த ராட்சதக் கப்பலின் கட்டுப்பாட்டை மாலுமியிடம் இருந்து பறித்தெடுத்து விட்டது.

புயலின் வேகம் 200 ஆயிரம் தொன் எடை கொண்ட கப்பலை நிலைகுலையச் செய்து பயண வழிக்குக் கிடையாக – கால்வாய்க்குக் குறுக்கே – திருப்பி விட்டுள்ளது. கப் பலின் முன்னும் பின்னுமான இரு புறங்களும் கால்வாயின் இரு பக்க மணல் கரைகளோடும் தரை தட்டியதால் இடக்கு முடக்காக நடுவில் இறுக்குப்பட்டு நிற்கிறது கப்பல்.




கப்டன் உட்பட இருபது மாலுமிகளும் பாதுகாப்பாக வெளியேறி உள்ளனர். கப்பலுக்கு சேதங்களோ எண்ணெய்க் கசிவுகளோ இன்னும் ஏற்பட வில்லை.

### கப்பலை மீட்க முடியுமா?

பொறிக்குள் சிக்கியது போலக் காணப்படுகின்ற அந்தக் கப்பலை மீட்டெடுத்து மீண்டும் அதன் பயண வழிக்குத் திருப்புகின்ற பகீரத முயற்சிகள் பெருமெடுப்பில் தொடங்கப்பட்டுள்ளன.

அதன் பாரிய எடை காரணமாக மீட்பு முயற்சி இலகுவானது அல்ல என்று நிபு ணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதற்கு நாள்கள், வாரங்கள் ஆகலாம் என்று மதிப்பிடப்படுகிறது. கப்பலின் சுமையைக் குறைத்தால் மட்டுமே அதனை நகர்த்த முடியும் என்ற நிலை. எனவே முதலில் அதிலிருந்து கொள்கலன்கள் வேறு சிறிய படகுகளுக்கு இறக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அது இலகு வான தல்ல. வெற்றியளிக்கும் அறிகுறி தெரியவில்லை.

கப்பலின் முன், பின் பகுதிகள் கால்வாயின் கரையோர மண்ணில் பொறுத்துப்போய் நிற்பதால் பாரிய இயந்திரங்களின் உதவியோடு மண்ணை அகழ்ந்து கரைப்பகுதிகளை அகலப்படுத்தும் வேலைகளும் முழு மூச்சில் இரவு பகலாக நடைபெறுகின்றன. சேதம் இன்றிக் கப்பலை நகர்ந்துவதற்கு கால்வாய்க் கரைகளை அகழ்ந்து ஆழமாக்குவதேஒரே வழி என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

எகிப்தின் கோரிக்கையை அடுத்து நெதர்லாந்தைத் தளமாகக் கொண்ட Royal Boskalis என்ற நிறுவனம் தனது நிபுணர்கள், இயந்திரங்கள் சகிதம் கப்பலை மீட்கும் அணியில் இணைந்து கொண்டுள்ளது. கடற்போக்குவரத்து மற்றும் கடற்கட்டுமானங்கள், பராமரிப்பு தொடர்பான சேவைகளை சர்வதேச ரீதியில் வழங்கிவருகின்ற பெரிய, நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் Royal Boskalis ஆகும்.

எகிப்து நாட்டில் சூயஸ் கால்வாய் (Suez Canal) மாபெரும் மனித உழைப்பினால் 1869 ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்பட்டது. மத்திய தரைக்கடலையும் செங் கடலையும் இணைக்கின்ற அது ஆபிரிக்காவை ஆசியா மற்றும் மத்திய கிழக்கு வட்டகைகளில் இருந்து பிரிக்கின்றது.

சூயஸ் கால்வாய் இதுபோன்ற ஒரு கப்பல் விபத்தால் துண்டிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். இதற்கு முன்பு போர்கள், போர் பதற்றங்கள் காரணமாக கால்வாய் மூடப்பட்டதுண்டு.

உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் 12 சதவீதம் சூயஸ் கால்வாயில் தங்கி இருக்கிறது. அதில் எரிபொருள் முக்கியமானது. மனித முயற்சியால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெட்டப்பட்ட அந்தக் கால்வாயூடான கடற் போக்குவரத்து தடைப்படுவது நாளொன்றுக்கு 960 கோடி அமெரிக்க டொலர் கள் பெறுமதியான வர்த்தகப் பொருள்களை முடக்குகின்றது எனக் கப்பல் போக்குவரத்துத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே கொரோனா வைரஸ் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற சர்வதேச கடல் வர்த்தக நடவடிக்கைகளை சூயஸ் கால்வாயின் இந்த முடக்கம் மேலும் தாக்கியுள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

ஏறக்குறைய ஒரு வார காலமாக சூயஸ் கால்வாயின் குறுக்கே சிக்கிக் கிடந்த பெரிய கொள்கலன் கப்பல் கரையிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டு தண்ணீரில் மிதக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் சூயஸ் கால்வாய் ஊடாக கப்பல் போக்குவரத்து மீள ஆரம்பமானது.

அதற்கு முன்னர் வரை இருந்த நிலைமைகளை விளக்குகின்றது இக்கட்டுரை.

# இந்தியா ஆதரவளிக்குமென நான் கூறவேயில்லை எனது கருத்து தவறான கற்பிதம் கொள்ளப்பட்டது!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே மறுப்பு



ஜெனிவா விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என நான் ஒருபோதும் கூறவே இல்லை. நான் தெரிவித்த கருத்து தவறாக விளங்கி கொள்ளப்பட்டுவிட்டது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியா எங்களுக்கு ஆதரவளிக்கும் என நான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. நான் சொன்னமை தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. நான் இந்தியப் பிரதமரின் வார்த்தைகளையே எதிரொலித்தேன். அவர் இந்தியா இலங்கைக்கு எந்த அநீதியும் இழைக்காது என குறிப்பிட்டிருந்தார். நான் அந்த வார்த்தைகளையே பயன்படுத்தினேன் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சிங்கள மொழிபெயர்ப்பின்போது ஒரு பத்திரிகையாளர் நான் இந்தியா ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தேன் எனக் கருதிவிட்டார். அது இலங்கையில் தலைப்புச்செய்தியாக மாறிவிட்டது. இந்திய ஊடகங்களும் அதனை செய்தியாக்கின என அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கொரோனா காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவால் அதிகம் பாதிக்கப்படுவதும் மன உளைச்சலுக்கு உட்படுவதும் சிறுவர்களே எனக் கூறலாம். உல்லாசமாகவும் உற்சாகமாகவும் உலாவித் திரிந்த சிறுவர்களை வீட்டுக்குள் முடக்கி வைப்பது அவர்களின் குடும்பத்தவர்களுக்குச் சவாலாகவும், சிறுவர்களுக்கு அவை துன்பமாகவும் அமைந்துள்ளன. இவை ஒருபுறம் இருக்க பாடசாலை, மேலதிக வகுப்புகள் எனக் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் நண்பர்களை விட்டுப் பிரிந்த நிலையும் சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவை மட்டுமன்றி நிகழ்நிலை வகுப்புகள் இடம் பெறுகின்ற போதிலும் அவை சிறந்த பயனை அளிக்கவில்லை.


- முன்சி பஸ்றி -

# மக்களின் வாழ்வாதாரத்தை புரட்டிப் போட்ட 'கொரோனா'

தனி மனிதன் குடும்பமாகி - குடும்பம் சமூகமாகி - சமூகமே உலகெங்கும் மக்களாக இணைந்து - பிணைந்து இருந்தோம். ஆனால், 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து அனைத்து மக்களையும் தனிமனிதனாக்கியுள்ளான் ஓர் அரக்கன்.

விண்ணில் பறந்து திரிந்தோம்; மண்ணில் உருண்டு புரண்டோம். ஆனால், இன்று எம்மை வீட்டுக்குள் முடங்க வைத்துள்ளான் அவன். இதனால் நாடெங்கும் - உலகெங்கும் ஊடகங்களின் உதட்டில் அவன் பெயர் உச்சரிப்பு. அவனே கொரோனா எனும் கொடிய அரக்கன்.

2020ஆம் ஆண்டை முழுவதுமாக நாள்காட்டியில் இருந்து கிழித்தெறிந்த அந்தக் கொரோனா உலக மக்களின் வாழ்வாதாரம் முழுவதையும் புரட்டிப் போட்டுள்ளது. 2021ஆம் ஆண்டிலும் அந்தக் கொடிய அரக்கனின் தாண்டவம் தொடர்கின்றது.

இந்தக் கொரோனா வைரஸானது 2019ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவிலுள்ள வுஹான் எனும் நகரத்திலிருந்து வெளிப்பட்டது. அங்கு இறைச்சி அங்காடியில் கொரோனாப் பாதிப்பு கண்டறியப்பட்டது. இது வௌவால்களுக்குத் தொற்றக்கூடிய ஒருவகை



வைரஸ்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டதாக இனங்காணப்பட்டது. ஆகவே, வௌவால்களூடாகவே மனிதர்கள் இடையே கொரோனா பரவியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இவை தவிர கொரோனாவின் ஆரம்பம் மற்றும் பரவல் தொடர்பாக இன்னும் பல கருத்துக்கள் உலகளவில் பேசப்படுகின்றன. அவை எவ்வாறு இருப்பினும் சமூகத்தில் பரவிய கொரோனா வைரஸ் முதியோர் முதற்கொண்டு கருவிலுள்ள குழந்தை வரைக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கொரோனாவால் முதியோரின் வாழ்வாதார மாற்றத்தை நோக்கினால் அவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என ஒன்றாக இருக்கக் கூடிய சந்தர்ப்பமாக இருந்த போதிலும், தனிப்பட்ட முறையில் அவர்களுக்குப் பெரும் இன்னல்கள் ஏற்பட்டுள்ளன. அந்தவகையில் பெரும்பாலான முதியவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள். அவர்களுக்கான மருத்துவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது மாத்திரமின்றி அதிகளவான முதியவர்களே கொரோனா வேட்டைக்குப் பலியாகின்றனர் என்ற அச்சத்தாலும் பல உளவியல் தாக்கங்கள் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

நடுத்தர வயதுடையவர்களும் இவ்வாறான பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளார்கள். அரச வேலை, தனியார் வேலை, வியாபாரம் மற்றும் கூலித்தொழில் செய்வோர் எனப் பலர் மத்தியில் நாளாந்த வியாபாரிகளும், அன்றாடக் கூலித் தொழில் செய்பவர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொரோனாப் பரவலால் உலகளாவிய ரீதியில் வர்த்தகம், நடுத்தரத் தொழில்கள், சிறு பெரு நிறுவனச் செயற்பாடுகள் அனைத்தும் முடங்கியுள்ளன. இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்துள்ளது.

இவை இவ்வாறு இருக்கத்தக்க கொரோனாத் தாக்கத்தால் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் தங்கள் வாழ்வில் அடுத்தகட்ட இலக்கை அடைய முடியாமல் தேக்க நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். உதாரணமாக உயர்கல்வி நடவடிக்கைகள், வேலை நியமனம் பெற இருந்தவர்கள் மற்றும் புதிதாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட இருந்தவர்கள் பெரும் அவதியுற்றுள்ளார்கள்.

இந்தக் கொரோனா காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவால் அதிகம் பாதிக்கப்படுவதும் மன உளைச்சலுக்கு உட்படுவதும் சிறுவர்களே எனக் கூறலாம். உல்லாசமாகவும் உற்சாகமாகவும் உலாவித் திரிந்த சிறுவர்களை வீட்டுக்குள் முடக்கி வைப்பது அவர்களின் குடும்பத்தவர்களுக்குச் சவாலாகவும், சிறுவர்களுக்கு அவை துன்பமாகவும் அமைந்துள்ளன. இவை ஒருபுறம் இருக்க பாடசாலை, மேலதிக வகுப்புகள் எனக் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் நண்பர்களை விட்டுப் பிரிந்த நிலையும் சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவை மட்டுமன்றி நிகழ்நிலை வகுப்புகள் இடம் பெறுகின்ற போதிலும் அவை சிறந்த பயனை அளிக்கவில்லை. மாறாக சிறுவர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசி பாவனையே அதிகமாகியது. இதனூடாகத் தேவையற்ற தொலைபேசி விளையாட்டுக்களைப் பழகுவது மட்டுமன்றி 'சிறுவர் பாலியல் காட்சி'களின் தேடலும் அதிகரித்துள்ளது எனப் பொலிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெறும்போது குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. கணவன் - மனைவியிடத்தில் அதிக வன்முறைகள் இடம்பெறுகின்றன. சாதாரணமாக இலங்கையில் 60 சதவீதமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறுகின்றன என்று ஐ.நாவில் இலங்கை பிரதிநிதியால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழல் கருவில் உள்ள குழந்தைகளைக் கூடப் பாதிக்கின்றது.



இதுவரை காலமும் உலகம் கண்டிராத பாரிய மாற்றங்களையும், இன்னல்களையும் எதிர்கொள்கின்றமைக்குக் 'கொரோனா' எனும் கொடிய அரக்கனே காரணமாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் பங்களிப்பைச் சிலாகித்து மெச்சுகிறார் தமிழரசுத் தலைவர் மாவை

## மட்டக்களப்புக் கூட்டத்தில் அவர் உரை



இலங்கை தொடர்பான ஜெனிவாத் தீர்மானத்தில் இந்தியா நடுநிலைமை வகித்தாலும் மிக ஆக்கபூர்வமான பணிகளை அந்தத் தீர்மானத்தின் ஊடாக அது எடுத்திருக்கின்றது. அவர்கள் மிகவும் தந்திரோபாயமாக அந்தத் தீர்மானத்தில் நடுநிலை வகித்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சிறந்த முறையில் எமது மக்களின் விடுதலைக்காக சர்வதேசத்தில் வேலை செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டமொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கிய ஓர் அரசமைப்பு எற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரசின் பிரேரணைகளில் இனப் பிரச்சினைத் தீர்வை முன்வைப்பார்களாக இருந்தால் – அரசாங்கத்திற்கு அப்படியொரு எண்ணம் இருந்தால் – மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறாக அரசாங்கத்துடன் ஒரு பேச்சுக்குச் செல்ல வேண்டும் என எமது அங்கத்தவர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கான ஒரு சூழ்நிலை எழ வேண்டும். அரசாங்கம் அதற்கு அழைப்பு விடுக்க வேண்டும். அரசாங்கம் அதற்குத் தகுந்ததாக அரசமைப்பை உருவாக்குவதற்கு ஆயத்தமாக இருந்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு நாங்களும் பேச்சு நடாத்துவோம். அதற்கான பிரேரணைகளும் ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை நாட்டினுடைய அதி முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினை சம்பந்தாக ஐக்கிய நாடுகள் சபையிலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலும் எமக்கு ஒரு புதிய உத்வேகம் இருக்கின்றது. எமது நாட்டின் இனப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் சர்வதேச ரீதியிலும் அடித்தளங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்த அரசாங்கம் தயார் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கும் தயாராக இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் முன்னரை விட பல படிகளில் முன்னேற்றம் உள்ளதாக இருக்கின்றது.

பல அமைப்புகள் பொதுமக்கள் மத்தியிலே இத்தனை காலமும் இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை, போர்க் குற்றங்களுக்குத் தீர்வோ, நீதியோ கிடைக்கவில்லை என்ற கருத்தில் இந்த மனித உரிமைப் பேரவையில் தீர்வு வரப் போகின்றது என்ற எதிர்பார்ப்போடு பல பிரேரணைகளை முன்வைத்திருந்தார்கள். ஆனால் அவற்றில் எல்லா விடயங்களையும் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றக் கூடிய விதிமுறைகள் இல்லாமல் இருக்கலாம்.

அது ஒரு பிரச்சினையான விடயம்தான். ஆனால், அப்படியான ஒரு தீர்மானம் மிகப் பெரிய அளவில் சர்வதேச குற்றவியல் விசாரணை போன்ற விடயங்களில் எடுக்கப்போனால் அந்தப் பிரேரணையை அங்கு கொண்டு வர முடியுமா? அவ்வாறு நிறைவேற்றுவதற்கு நாடுகள் இணக்கம் கொண்டிருக்கின்றனவா? 47 நாடுகளில் எத்தனை நாடுகள் அவ்வாறான பிரேரணையை ஆதரிக்கும்? என்ற விடயங்கள் எல்லாம் எழுந்தால் அதற்கான பல தடைகள் இருக்கின்றன.

அது அவ்வாறு இலகுவான விடயம் அல்ல. மனித உரிமைப் பேரவையில் அவ்வாறு எடுப்பதாகவும் இல்லை. ஆனால், அது பாதுகாப்புச் சபைக்குப் போக வேண்டும். ஆனால், அந்த விடயங்களையெல்லாம் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் மிகத் தெளிவாகக் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு போக வேண்டும் என்ற கருத்துப்பட அறிக்கையிட்டுள்ளார். அதைப் பிரதிபலிக்க கூடிய பல விதிமுறைகளும் இந்தப் பேரவையின் பிரேரணையிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

பொறுப்புக் கூறல் விடயத்தில் மூன்று நான்கு பந்திகளில் பொறுப்புக் கூறல் எவ்வாறு நிலை நாட்டப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கம் மற்றும் போர்க்குற்றம் இழைத்தவர்களுக்கு எதிரான விடயங்களைத் திரட்டக் கூடிய வகையில் மனித உரிமைகள் ஆணையாளர் நிறைவேற்றக் கூடியதாக அதனை எங்கு கொண்டு வர வேண்டுமோ அங்கு கொண்டு வருவதற்கான ஆதாரங்களைத் திரட்டக் கூடிய விதத்தில் பன்னிரண்டு ஆணையாளர்களை நியமிப்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அதை விட எங்களுக்கு முன்னுதாரணமாக மனித உரிமைப் பேரவையிலும் நிறைவேற்றப்பட முடியாத தீர்மானங்களை அவை பாதுகாப்புச் சபைக்குப் போகாமலும் அல்லது பொதுச் சபையிலே நிறைவேற்றப்படுவதற்குப் பொருத்தமான விடயங்கள் இருப்பதன் அடிப்படையில், சிரியாவில் எவ்வாறு குற்றவியல் விசாரணையை நடத்துவதற்கு ஐ.நாவின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றதோ, அதேபோல் மியன்மாரில் ஒரு போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு எப்படி மனித உரிமைப் பேரவைக்கும் பாதுகாப்புச் சபைக்கும் அப்பால் அதற்கான சாட்சியங்களையும் திரட்டுகின்ற பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றதோ, அதே போன்றதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

குற்றவியல் பிரேரணை நிறைவேற்றப்படாது விட்டாலும், இந்த அரசு, இராணுவ அதிகாரிகள் இழைத்த குற்றங்கள் என்ற விடயங்களில் இந்த தீர்மானத்தை ஆதரித்திருக்கின்ற நாடுகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அங்கே வழிகாட்டல்கள் இருக்கின்றன.

தற்போது இந்த அரசாங்கம் எதற்காக தங்கள் இராணுவத்திற்குத் தண்டனைகள் விதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்க வேண்டும்? ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் என்பவற்றை ஒட்டித்தான் இந்த அரசாங்கம் மேற்சொன்ன சட்ட விடயத்தைப் பற்றிப் பேசுகின்றது என்று எண்ணுகின்றோம். இவ்வாறெல்லாம் அந்தத் தீர்மானம் மிக வலுவானதாக இருக்கின்றது.

ஆனால் மக்களுடைய எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் படி இந்த அரசாங்கத்தில் குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை, பொறுப்புக் கூறல் நிறைவேற்றப்படவில்லை, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் இந்த மனித உரிமைப் பேரவைத் தீர்மானம் தங்களுக்குச் சாதகமாக வந்துவிட வேண்டும் என்று அவர்கள் அதிகமாகப் பல எண்ணப்பாடுகளைக் கொண்டிருந்தார்கள்.

அவை அப்படியே மிகத் தெளிவாக இந்த மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் இந்த ஏக்கம், ஏமாற்றம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதனை நாங்கள் தெளிவாகப் பார்த்தால் மன்னிப்புச் சபை மற்றும் தயான் ஜயதிலக போன்ற நடுநிலைவாதிகள், சர்வதேசத்தின் பல நாடுகள் போன்றவை இந்த மனித உரிமைப் பேரவைத் தீர்மானம் முன்னரை விட எவ்வளவு கடுமையானதாக இருக்கின்றது, அரசாங்கத்திற்குப் பல நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியதென்று வர்ணித்திருக்கின்றார்கள்.

எனவே இதை விட நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்குவது மட்டுமல்ல, முதன் முறையாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் அங்கே எடுக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இந்த நாட்டில் தமிழர்களுக்கான, தமிழ்த் தேசத்தின் தமிழ் இன விடுதலைக்கான, அரசியற் தீர்வு நிச்சயம் ஏற்பட வேண்டும். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகள் அனைத்தும் சர்வதேசத்தின் ஏனைய சக்திகள் அனைத்தும் ஒரு கட்டமைப்பாகச் செயற்பட வேண்டும்.

நாங்களும் தேர்தலைத் தாண்டி, இந்த இனப் பிரச்சினையை தீர்க்கக் கூடியதாக ஒரு சிறந்த கட்டமைப்பை எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக உருவாக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே பல தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றோம். சர்வதேச ரீதியிலும் அவ்வாறான கட்டமைப்பு உருவாக வேண்டும்.

நாங்கள் வெறுமனே தேர்தலை மையமாகக் கொண்ட ஒரு கூட்டு அல்ல, எங்களுக்கு ஒரு சிறந்த பலம் வாய்ந்த கட்டமைப்பு புலம்பெயர் ரீதியிலும், இங்கும் உருவாக வேண்டும். அது பல நாடுகளின் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் இன்று உச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

நவநீதம்பிள்ளை அவர்களும் சர்வதேச ரீதியில் எமது இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு கட்டமைப்பினை உருவாக்க வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார். அது எமக்கு மிகவும் உற்சாகமாக இருக்கின்றது.

நாம் எதிர்பார்த்த முழுவதும் அப்படியே இங்கே கிடைக்காது விட்டாலும் இந்த மனித உரிமைப் பேரவையின் முன்னேற்றங்கள் தொடர்பில் நாங்கள் ஆர்வம் கொண்டு பொறுத்திருந்து அந்த நடைமுறைகளுக்கு முழுமையாக நாங்களும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டும்.

மகாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் மனித உரிமைப் பேரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தியா போன்ற நாடுகளும் அது தொடர்பில் பேசியிருக்கின்றன. இந்தியா நடுநிலைமை வகித்தாலும் மிக ஆக்கபூர்வமான பணிகளை அந்தத் தீர்மானத்தின் ஊடாக எடுத்திருக்கின்றது. அந்தப் பொறுப்பையும் நாங்கள் உணருகின்றோம்.

அவர்கள் மிகவும் தந்திரோபாயமாக அந்தத் தீர்மானத்தில் நடுநிலை வகித்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சிறந்த முறையில் எமது மக்களின் விடுதலைக்காக சர்வதேசத்தில் வேலை செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என்று பல நாடுகளும் வற்புறுத்தியிருக்கின்றன.

அவ்வாறு நடைபெறாது விட்டாலும் அந்த நாடுகள் பலவும் இந்த அரசாங்கத்திற்கு எதிராகத்தான் செயற்பட வேண்டும். மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் நாங்கள் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டி இருக்கும். அதனூடாக அதனை நாங்கள் முகங்கொடுப்போம்.

ஆளுங்கட்சிகள் வடக்கு,கிழக்கைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நாங்களும் எவ்வளவு தூரத்திற்கு மிகப் பெரிய அளிவில் ஒன்றுபட்டு செயற்பட முடியும், தேர்தல் வெற்றியைப் பெற முடியும் என்பது பற்றி ஆராய்வோம். – என்று தெரிவித்தார்.

# புத்தாண்டுக்கொண்டாட்டங்கள்; அனுமதி அடுத்தவாரம் முடிவு

கொழும்பு, மார்ச் 30

புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் போட்டிகளை நடத்த பொதுமக்களை அனுமதிக்கும் முடிவு அடுத்த வாரத்தில் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்படும் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

புத்தாண்டு தொடர்பான விழாக்களை நடத்துவதற்கான பரிந்துரைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் அந்த பரிந்துரைகள் தொடர்பில் தொழில்நுட்பக் குழு இறுதி முடிவு எடுக்கும் என கூறினார்.

இருப்பினும், பண்டிகைக் காலங்களில் பயணத்தை முடிந்தவரை மட்டுப்படுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

மேலும் கொரோனாத் தொற்றின் மற்றுமொரு அலையைத் தடுக்க பண்டிகை காலங்களில் நாடு முழுவதும் விசேட திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் கண்டறியப்பட்டால் கைது

## அரசு அதிரடி

தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வருகை தந்தாலோ அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாதக் கொள்கையைப் பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமை போன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக இலங்கை விவகாரங்களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும், தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளது.

இந்தத் தடைக்கான காரணம் தொடர்பாகப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில ஆகியோர் அரசின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.

# 1,250 வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் அடைக்கலம்

வெளிநாடுகளில்இருந்து புகலிடகோரிக்கையாளர்களாக இலங்கைக்கு வந்த 1,250 வெளிநாட்டவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்தூதரகரின் தலையீட்டின் மூலம் இந்த வெளிநாட்டினருக்கு அரசியல் தஞ்சம் வழங்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் அவர்களுக்கு புகலிடம் வழங்கப்படும் வரை இலங்கையில் அவர்களுக்கு தற்காலிக அரசியல் தஞ்சம் வழங்கப்படவுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈராக், மாலைத்தீவு உட்பட நாடுகளில் இருந்து பாதுகாப்பிற்காக இலங்கையில் புகலிடம் கோருவோருக்கு தற்காலிக புகலிடம் வழங்குதற்கு அகதிகளின் நிலை தொடர்பான ஐ.நா. மாநாட்டிலும் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

பிற நாடுகளில் புகலிடம் கோருவோர் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு அடிபணிய வேண்டியிருந்தாலும், இலங்கைக்கு வருபவர்களுக்கு நீர்கொழும்பு, கல்கிஸ்ஸை மற்றும் ஏனைய பகுதிகளில் சுதந்திரமாக வாழ சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அவர்களில் பெரும்பாலோர் இந்த நாட்டில் வேலை செய்கிறார்கள் மற்றும் இலங்கை பெண்களைத் திருமணம் செய்துள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

தற்காலிக புகலிடம் கோருவோர் தொடர்பான தகவல்களை வழங்க ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் இதற்கு முன்னர் தயக்கம் காட்டியிருந்தாலும், ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னர் இந்த குழுக்களை கண்காணிக்க பாதுகாப்பு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த பகுதிகள் மாதந்தோறும் குறித்த புகலிட கோரிக்கையாளர்களை அடையாளம் கண்டு, அப்பகுதியில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் அவர்கள் தொடர்பிலான அறிக்கைகளை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் மனித உரிமைகளை மீறுவதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டும் சூழ்நிலையில் அகதிகளை இலங்கை ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது.

# மேல்மாகாணத்தில் 1,120 பேர் கைது

மேல் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையில் 1,120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிறு காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரையான காலப் பகுதியிலேயே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக 47 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 418 பேரும், ஊழல் குற்றச்சாட்டில் 549 பேருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# போர்வையால் கழுத்தை நெரித்து கணவரைக் கொன்றார் மனைவி

போர்வையால் கழுத்தை நெரித்து கணவரை மாணவி கொன்ற சம்பவம் கொஸ்வத்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவிக்கிடையில் நீண்ட நாள்களாக காணப்பட்ட முரண்பாடுகளே கொலைக்கான காரணம் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்தக் கொலை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொஸ்வத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிமெட்டியான மேற்கு – லுணுவில பிரதேசத்தில் கடந்த ஞாயிறுக்கிழமை இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரான 38 வயதுடைய குறித்த பெண், 44 வயதுடைய தனது கணவனை போர்வையால் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நீண்ட காலமாக அவருக்கும் கணவனுக்குமிடையில் காணப்பட்ட முரண்பாடுகளே கொலைக்கான காரணம் என்று தெரியவந்துள்ளது.

குறித்த தம்பதியினருக்கு 3 பிள்ளைகள் காணப்படுகின்றனர். அவர்களை பொலிஸார் பொறுப்பேற்று சிறுவர் காப்பகத்தில் ஒப்படைத்துள்ளனர். கொஸ்வத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். – என்றார்.

# யாழிலிருந்து வவுனியா செல்லும் பயணிகளுக்கு பி.சி.ஆர். சோதனை

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பஸ்ஸில் வரும் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வவுனியா விதை உற்பத்திகள் பண்ணைக்கு முன்பாக பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்றிணைந்து இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா ஊடாக பயணிக்கும் பஸ்களை வழி மறித்து வவுனியாவில் இறங்கவுள்ள பயணிகளிடமே மேற்படி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் அங்கிருந்து வவுனியாவிற்கு வரும் பயணிகளூடாக வவுனியாவிற்கும் தொற்று பரவுவதை தடுப்பதற்கே குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# நீரில் மூழ்கி இருவர் பலி

கொலொன்ன, வெல்வதுகொட தினகவெல நீர்வீழ்ச்சியில் நீராடும்போது இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு மாலை இடம்பெற்றுள்ளது. 17 வயதுடைய கொடகவெல, ஹல்வின்ன பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கொலொன்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தடுப்பூசி போடப்பட்ட இலங்கையர்கள் தனிமைப்படுத்தலைத் தவிர்க்கலாம்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 30

கொவிட் – 19 இற்கு எதிரான தடுப்பூசியை செலுத்திக் கொண்டு நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லையென முடிவுகள் கிடைக்கப்பெற்றால், அவர்கள் சமூகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என கொவிட் – 19 தொற்றுக்கான தேசிய செயலணி தலைவர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருகின்ற செயற்றிட்டம் தொடர்பாக, நேற்று (திங்கட்கிழமை) தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

வெளிநாட்டிலிருந்து வரும் இலங்கையர்கள், ஏற்கனவே கொவிட் – 19 இற்கு எதிரான தடுப்பூசி போடப்பட்டவர்களாக இருப்பினும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

இதன்போது பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று இல்லையென முடிவுகள் கிடைத்தால், அவர்கள் வருகைதந்த 2 ஆம் நாள் முதல் சமூகத்தில் நுழைய முடியும்.

இருப்பினும் வெளிநாட்டவர்களுக்கு வெவ்வேறு வகையான தடுப்பூசிகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆகையால் 7 ஆவது நாளில், பி.சி.ஆர்.பரிசோதனை முடிவு எதிர்மறையாக இருந்தால், அவர்கள் தனிமைப்படுத்தல் பகுதியில் இருந்து வெளியேறலாம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## ஏலக்காய் மருத்துவ மற்றும் இரசாயன பண்புகள்



ஏலக்காய் அதன் பாரம்பரிய மருத்துவ மற்றும் உணவு பயன்பாடுகளுக்கு நன்கு அறியப்பட்டதாகும். நறுமணம் மற்றும் சுவை போன்ற பண்புகளைக் கொண்டு அதன் விதை தோல் காணப்படுவதன் காரணமாகவே இந்த வாசனைப் பொருள் விசேடமாக பிரபல்யம் ஆனது. நுகர்வின் அளவு மற்றும் சுவையூட்டும் பண்பியல் என்பவற்றுடன் நன்கு ஸ்தாபிப்பதன் காரணமாக ஏலம் சுவையூட்டும் பொருளாக நன்கு பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஏலம் கறி சமைக்கவும் உணவு பொருள் உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகின்றது.

ஏலக்காயின் கூட்டு செயற்பாடுகளுடன் உயிரியல் செயற்பாடு மற்றும் விரைவில் ஆவியாதல் உற்கூறுகள் என்பன காணப்படுகின்றன. அதாவது **antioxidant, antihypertensive, gastroprotective** மற்றும் **antibacterial** இந்த வாசனைத் திரவியமானது பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்திகளின் போது குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்துவதுடன் உணவு மற்றும் போசனை செயற்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

ஏலக்காயின் அத்தியாவசிய எண்ணெயில் உள்ள நறுமண சிகிச்சை திறன் சமிபாட்டு செயன்முறைக்கு பெரிதும் பயனுள்ளதாகும். ஏலக்காயில் அத்தியவசிய எண்ணையில் உள்ள முக்கிய கூறுகள் **α-terpinyl acetate, 1,8-cineole** மற்றும் **linalool.**

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# அதிகாரப் பகிர்வு என்கிற போர்வையில் பிரிவினைக்கு சில நாடுகள் முயற்சியாம்



## அவற்றின் புவிசார் நலனுக்கான திட்டம் எனக் கோட்டா காட்டம்

**கொழும்பு,மார்ச்29**

**இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்கிற பெயரில் பிரிவினையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தமது புவிசார் நலன்களை மற்றைய நாடுகள் அடைய முயற்சிப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ.**

கிராமங்களுடனான உரையாடல் நிகழ்ச்சியில் மக்கள் முன் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் இந்த நிகழ்வு நேற்று நடந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது இந்தியா அதற்கு ஆதரவாக வாக்களிக்காத போதும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற மேற்கு நாடுகளின் கோரிக்கையை ஆதரித்துப் பேசியமை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடக்கும் வல்லரசுகளின் அதிகாரப் போட்டியில் சிக்கிக்கொள்ள இலங்கை விரும்பவில்லை என்று அந்த நிகழ்வில் கூறிய கோட்டாபய, நாட்டின் இறைமைக்கு துரோகம் இழைக்க முடியாது என்றார்.

ஜெனிவா சவாலை எந்தவித அச்சமும் இன்றி எதிர்கொள்வோம். அழுத்தங்களுக்கு அடிபணியமாட்டோம். இது சுதந்திரமடைந்த நாடு. இந்துமா கடலில் நடக்கும் வல்லரசுகளின் போட்டிக்கு இரையாகமாட்டோம் – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழ் மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கை அரசினால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டமை போல் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் மீனவர்களையும் உடன் விடுதலை செய்ய இலங்கை,இந்திய அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று (திங்கட்கிழமை) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 54 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு அவர்கள் இரண்டு தினங்களில் படகுகளுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்களின் விடுதலைக்காக இந்திய தூதரகம் துரித நடவடிக் கைகளை மேற்கொண்டு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தமை பாராட்டத்தக்கது.

ஆனால் இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டி குற்றச்சாட்டில் பிடிபட்டு இந்திய சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரும்பான்மை இன மீனவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் பல்வேறு முயற் சிகளை மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்கின்றனர்.

ஆனால் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களையும், அவர்களின் மீன் பிடி உடமைகளையும் இன்று வரை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லை தாண்டி பிடிபடும் பட்சத்தில் அவர்களை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை அரசாங்கம் தமிழர்களின் விடயம் என்ற வகையில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. அவர்களும் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் விடுதலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தொடர்ந்தும் சிறையில் வாட அனுமதிக்கப்படக் கூடாது. எனவே தமிழராக உள்ள மீன் பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவில் இருக்கின்ற இலங்கை தூதரகமும் இலங்கை அரசாங்கமும் தமிழ் மீனவர்களை விடுதலை செய்வதற்கான ஒரு முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

எங்கு பார்த்தாலும் இன ரீதியான ஒடுக்கு முறையை இலங்கை அரசாங்கம் செய்து வருகின்றது. குறிப்பாக எல்லை தாண்டி போகின்ற எமது மீனவர்கள் இன்றைக்கும் சிறைகளில் வாடிக் கொண்டு இருக்கின்றார்கள்.அவர்கள் வேண்டும் என்று எல்லை தாண்டிச் செல்வதில்லை.

எனவே அவர்களை விடுதலை செய் வதற்கான முயற்சிகளை யாரும் செய்ய வில்லை. நாங்களும், அமைப்புக்களும் மீனவர்களை விடுதலை செய்யக் குரல் கொடுக்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை. எனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்து நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

# தடை செய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்புபட்டால் உடனடியாகக் கைது

## அரசுத் தரப்பில் அறிவிப்பு



தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வருகை தந்தாலோ அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கர வாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாத கொள்கையை பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமை போன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இலங்கை விவகாரங் களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம் பெயர் தமிழ் அமைப்புகளையும் தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட 400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை



அரசு தடை செய்துள்ளது.

இந்தத் தடைக்கான காரணம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் உதயகம்மன் பில ஆகியோர் அரசின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.


UNIVERSITY OF JAFFNA
FACULTY OF TECHNOLOGY
WALK – IN – INTERVIEW

Walk in Interview for appointments to the following posts will be held on **06.04.2021** at **9.30a.m.** at the **Board Room of Faculty of Agriculture, KilinochchiPremises, University of Jaffna.**

- Temporary Assistant Lecturer / Temporary Demonstratorin **Engineering Technology:** Construction Technology/Electro Technology/Automobile Technology.
- Temporary Assistant Lecturer / Temporary Demonstratorin **BioSystems Technology:** Food production Technology/ Commercial green farming Technology.
- Temporary Demonstrator in **Interdisciplinary Studies:** Information and Communication Technology/Physics/related fields.

**For detailed information on qualifications and salary, please refer to www.jfn.ac.lk.**

**Registrar**
**University of Jaffna.**
29.03.2021.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் நாடு தற்போது உருவாகுகின்றது

## கருணா அம்மான் பெருமிதம்



நமது நாட்டில் சிறந்ததொரு நிர்வாகக் கட்டமைப்பு தற்போது உருவாகியிருக்கின்றது. அதனைச் சிலர் விமர்சிக்காலம். இந்த நாட்டைத் தளம்பல் இல்லாமல் வழி நடத்துகின்ற ஒரு ஜனாதிபதி. அதற்கு ஓர் அத்திபாரமாக எமது பிரதமர் இருக்கின்றார் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரமுயர்வு தொடர்பில் நாங்கள் தொடர்ந்து பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி, பிரதமர், துறைசார்ந்த அமைச்சர் உட்பட அனைவரிடமும் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். அதேபோல் கிட்டங்கிப் பாலம் உட்பட பல பாலங்கள் தொடர்பிலும் கதைத்துள்ளோம். நாடாளுமன்றத் தேர்தலின் போது அம்பாறை மாவட்டத்துக்கு நாங்கள் என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தோமோ சொன்ன விடயங்கள் அனைத்தும் நடக்கும்.

எமது கட்சியை நாங்கள் பாரிய சக்தியாக வளர்த்தெடுக்க வேண்டும். இதற்கான வேலைகளை இலகுவாக்குவதற்கு நிர்வாகத்தைப் பிரித்துக் கொடுத்துள்ளோம். அத்துடன் எமது கட்சிக்கான ஒழுக்கம் மிகவும் முக்கியம். கருணா அம்மான் என்ற பெயர் சும்மா வரவில்லை. எத்தனை போராட்டங்கள் எத்தனை தியாகங்கள் எத்தனை இழப்புகளைக் கடந்து வந்துள்ளோம். அதனை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

எமது மக்களின் விடிவுக்காக ஆயுதம் தூக்கிப் போராடினோம். அதில் முடிவு காணப்படவில்லை. ஆனால் அரசியல் ரீதியிலாவது அதனைப் பெற்றெடுப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். அதற்காகத் தான் இந்தக் கட்சியை நாங்கள் ஆரம்பித்து வளர்த்தெடுத்து திறம்படக் கொண்டு வருகின்றோம். எமது கட்சி ஒரு பலமான, உறுதியான கட்சியாக வளர்ந்து வருகின்றது.

நமக்கு பிரதேசவாதம், இனவாதம் ஒன்றும் வேண்டாம். அந்தளவிற்கு நாங்கள் அல்ல. எங்கெல்லாம் தமிழன் வாழ்கின்றானோ அங்கெல்லாம் நாங்கள் குரல்கொடுப்போம். அந்தக் கொள்கையில் தான் எமது கட்சி வளர்ந்து வருகின்றது.

எவரையும் தனிப்பட்ட ரீதியில் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. கொள்கை ரீதியான பிரச்சினைகள் இருக்கின்றமை வேறு விடயம். இன்று நமக்காக எத்தனையோ பேர் உலகம் முழுவதும் இருந்து சிரமப்படுகின்றார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெளிநாட்டில் வசிக்கும் பல உள்ளங்கள் எமக்கு நிதிப்பங்களிப்பை மேற்கொண்டார்கள். உண்மையில் அவர்களை மறக்க முடியாது. அதேபோல் நமக்காக உழைத்துக்கொண்டிருக்கும் முகநூல் போராளிகள் அவர்களையும் மறந்து விட முடியாது.

இவ்வாறெல்லாம் நிறைய சக்திகள் நமக்கு உதவி செய்துகொண்டிருக்கின்றன. எனவே சிறந்த எதிர்காலமொன்று நமக்கு இருக்கின்றது.

மக்களைப் பொருளாதார ரீதியில் வளர்த்தெடுப்பதற்கு நாங்கள் முயற்சியெடுக்க வேண்டும். புதிய புதிய பொருளாதாரத் திட்டங்களைக் கொண்டு வருவோம். நிறைய முதலீட்டாளர்களுடனும் கலந்துரையாடியுள்ளோம்.

எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதுவும் நேர்மையாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஏழை மக்களிடம் காசு கேட்டால் அவர்கள் எங்கு செல்வார்கள்.

நமது நாட்டில் சிறந்ததொரு நிர்வாகக் கட்டமைப்பு தற்போது உருவாகியிருக்கின்றது. அதனைச் சிலர் விமர்சிக்காலம். ஆனால், இன்று ஐ.நா. பிரச்சினை, கொரோனா பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை போன்ற சிக்கலான கட்டத்தில் இந்த நாட்டைத் தளம்பல் இல்லாமல் வழிநடத்துகின்ற ஒரு ஜனாதிபதி. அதற்கு ஓர் அத்திபாரமாக எமது பிரதமர் இருக்கின்றார்.

இவ்வாறான நிர்வாகக் கட்டமைப்புக்குள்ளால் நாம் நிறைய சாதனைகளைப் படைக்கலாம். அரசாங்கத்தை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அதன்மூலம் எமது மக்களுக்கான வளங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மக்களுக்காக நேர்மையாக உழைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

எனவே இந்த சிறந்த வாய்ப்பான சந்தர்ப்பத்தில் எமது கட்சியை வழிநடத்த வேண்டும். இதற்கான பொறுப்புகள் எமது கட்சியின் அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டு அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். -என்று தெரிவித்தார்.

# சந்தையில் விற்பனையாகும் தேங்காய் எண்ணெய் நுகர்வோர் பாவனைக்கு உகந்ததா எனச் சந்தேகம்

சந்தைகளில் தற்போது விற்பனை செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெய் நுகர்வோர் பாவனைக்கு உகந்ததா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சு துரிதகர மான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டு மக்களால் மரக்கறி எண்ணெய் கொள்வனவு செய்ய முடியாது என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெய் பாவனை உடல் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்து பாம் ஒயில் பாவனையை ஊக்குவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்ச்சைக்குரிய தேங்காய் எண்ணெய் தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

புற்றுநோயை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு அவை சந்தையில் விநியோகிக்கப்பட்டுள்ளன எனச் சர்ச்சை எழுந்துள்ளது.

ஆனால் அவ்வாறானதோர் எண்ணெய் இறக்குமதி செய்யப் படவில்லை என வர்த்தகத்துறை அமைச்சர் குறிப்பிடுகிறார். இந்த விடயம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்கள் தேங்காய் எண்ணெய் அதிகளவில் உணவிற்குப் பயன்படுத்துவார்கள். இவ்வாறான நிலையில் இதுபோன்ற பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளமை நுகர்வோர் மத்தியில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலான மக்களால் மரக்கறி எண்ணெய் கொள்வனவு செய்ய முடியாது. ஆகவே சந்தையில் உள்ள தேங்காய் எண்ணெய் தரமானதா, இல்லையா என்பது தொடர்பில் சுகாதார அமைச்சு விரைவாக அறிவிக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெய் பாவனை உணவிற்கு பொருத்தமற்றது, உடல் ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்து மலேசியா உள்ளிட்ட நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வகைகளின் பாவனையை ஊக்குவிக்கும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப் படுகின்றன. இந்த விடயம் குறித்து விரைவில் தெளிவுப்படுத்துவோம். – என்றார்.

# பேராசிரியர் நந்தியின் சிறுகதைகள் பற்றி இணையவழியில் நினைவேந்தல் நிகழ்வு

ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூதாய மருத்துவத்துறை பேராசிரியராகவும் கடமையாற்றிய வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களின் 93 ஆவது பிறந்த தின நினைவேந்தல் நிகழ்வு இணையவழி மார்ச் 30, 31 மற்றும் ஏப்ரல் முதலாம் திகதிகளில் இரவு 7.00 - 9.00 மணி வரை ஜூம் செயலிவழி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்க மருத்துவபீடத்தை உருவாக்கிய முன்னொடிகளில் ஒருவரான பேராசிரியர் நந்தி தனது மருத்துவத்துறை அனுபவங்களோடு தமிழ் இலக்கியத்துறையில் தனக்கான தனித்துவமான இடத்தைப் பதிவு செய்தவர். மருத்துவ இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள், ஆன்மீக, சிறுவர், நாடக இலக்கியம் எனப் பல துறைகளில் தனது மகத்தான பங்களிப்பை ஈழத்து இலக்கியத்துறைக்கு வழங்கியுள்ளார்.

எளியமுறையில் மருத்துவத் தகவல்களை மக்களிடம் கொண்ட. சேர்த்த பெருமை பேராசிரியர் நந்தியைச் சாரும்.

இவரது மருத்துவத்துறை இலக்கியமான 'அருமைத் தங்கைக்கு', 'அன்புள்ள நந்தினி' போன்றன மருத்துவ அறிவுரை நூல்கள் எளிமையான இலகுதமிழில் மருத்துவ அறிவை பாமரருக்கு கொண்டுசேர்த்தவை. 'இதயநோயும் தடுப்பு முறைகளும்' என்ற மருத்துவ நூலும் இதற்கு சிறந்த உதாரணமாகும். இதே போன்று 'உங்களைப்பற்றி', 'சுட்டிகளுக்குப் பாட்டுக்கள்', 'தம்பி தங்கைக்கு' போன்ற சிறுவர் நூல்களையும் எழுதியுள்ளார். 'குரங்குகள்' என்ற நாடகநூலும் வெளிவந்துள்ளது. 'மலைக்கொழுந்து', 'தங்கச்சியம்மா' ஆகிய நாவல்களையும் இவர் எழுதியுள்ளார்.

தனக்கேயுரிய தனித்துவமான விவரிப்புப் பாணியையும் கதைசொல்லும் முறையையும் கொண்டுள்ளார. இலகுவாக அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய எழுத்து நடையையும், அருமையான கதைக. களங்களையும், கருக்களையும் கொண்டு இவரது படைப்புக்கள் தனித்துவமாகத் துலங்குகின்றன.

பேராசிரியர் நந்தி ஐம்பது சிறுகதைகளை எழுதியுள்ளார். 'ஆசையின் ஓசை' என்ற இவரது முதலாவது சிறுகதை 1960 ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. தொடர்ச்சியாக நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்துறையில் தடம் பதித்தவர் பேராசிரியர் நந்தி. பேறறிஞர் ராஜாஜி அவர்கள் 'நந்தி' என்ற புனைபெயரை இவருக்குச் சூட்டினார். பின்னாளில் நந்தி என்ற பெயர் தமிழ் இலக்கியத்துறையில் தனித்துவமான அடையாளமாக நிலைத்துவிட்டது.


'நந்தியின் சிறுகதைகள்' என்ற நூல் அவரது சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. 2005 இல் தனது இறப்புவரை இலக்கியத் துறையிலும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவத் துறையிலும் அயராது பணியாற்றியவர்.

இவரது நினைவாக இணையவழி சிறுகதை வாசிப்பு நிகழ்வு தொடர்ச்சியாக மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. 12 சிறுகதைகள் வாசிக்கப் படுகின்றன. இதில் இலங்கையின் பிரபலமான வானொலி அறிவிப்பாளர்களும், நாடகர்களும், கல்வியாளர்களும் சிறுகதைகளை வாசிக்கிறார்கள். முதல் நாள் நிகழ்வை கலாநிதி ஆறு.திரு முருகன் அவர்கள் ஆரம்பித்து வைக்கிறார்.

எம்.சத்தியகுமார் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), கஸ்ரோ ராகுல் (சூரியன் எவ்.எம்), தே.ஜனனீ (யாழ்ப்பாணப. பல்கலைக்கழகம்), கே. ஜமுனாமலர் (சுவிஸ் இலக்கியவாதி), கே. கிருத்திகா (ஐ..பி.சி. தமிழ்), வி.துவாரதி (ஐ..பி.சி. தமிழ்), பாலா பாலேஸ் (ஐ..பி.சி. தமிழ்), சர்வேஸ்வரா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), க.இ.கமலநாதன் (தேசியக் கல்வியல் கல்லூரி), ஆர். மனோரஞ்சினி (ஆசிரியர்), தேவநாயகம் தேவானந் (நாடகர்), சீமா சாமுவல் (இலக்கியவாதி, இந்தியா) ஆகியோர் பல்வேறு தேசங்களிலிருந்து ஆற்றுகை செய்கிறார்கள். இலவசமாக நடைபெறும் இந்த நிகழ்வில் சூம் 2666873933 வழியாக இணைந்துகொள்ளலாம்.

# மலையகக் கல்வி வளர்ச்சிக்கு வறுமைதான் முக்கிய தடை!

## என்கிறார் ஜீவன் தொண்டமான்



மலையகத்தில் கல்வி வளர்ச்சிக்கு வறுமைதான் முக்கிய தடையாக இருக்கின்றது என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிகழ்வில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இ.தொ.கா. என்பது ஒரு குடும்பமாகும் அதன் ஒற்றுமை சமூகத்தின் ஒற்றுமையாகும். ஊதிய உரிமைக்கான போராட்டத்தில் அது அனைவருக்கும் புரிந்திருக்கும்.

அந்தவகையில் காங்கிரஸில் அங்கம் வகிக்கின்றவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்பதே எங்களது எதிர்ப்பார்ப்பாகும்.

மேலும் மலையகத்திலுள்ள இளைய சமூகத்தினர் மற்றும் பிள்ளைகள் கற்பதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர்.

ஆனாலும் கல்வி ஊடாக முன்னேறி செல்வதற்கு வறுமைதான் அவர்களுக்குத் தடையாக இருக்கின்றது. அதனை தகர்த்துவதற்கே புலமைப்பரிசில் திட்டங்களை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இயற்கை வனங்களை பாதுகாக்க அரசாங்கம் கவனம் செலுத்தும்

## வனப்பகுதியை 30 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை என்கிறார் அமரவீர



இயற்கை சூழல் அழிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய பாதுகாப்பு தரப்பினர் பிரத்தியேக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள் என சுற்றாடற்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தங்காலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சிங்கராஜ வனப்பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தக் கூடிய தகவல்கள் இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை.

வனப்பகுதிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பாகப் பொது மக்கள் முறைப்பாடளிக்கலாம்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க பல நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், முறைப்பாடளிக்க அவசர தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கராஜ வனப்பகுதி அழிக்கப்படுவதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

காடுகள் அழிக்கப்பட்டு ஹோட்டல் நிர்மாணிக்கப்படுவதாகக் குறிப்படப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தமானது எனவும், 40 வருட கால உறுதிப்படுத்திரத்தை ஆவணப்படுத்தியுள்ளதாகவும், சமர்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹோட்டல் நிர்மாணிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட இடம் சிங்கராஜ வனப்பகுதில் இருந்து 3 கிலோ மீற்றருக்கு அப்பால் காணப்படுகிறது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையை மீள்பரிசீலனை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விவகாரத்தைத் தங்களின் அரசியல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் பல பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும் வனப்பகுதியை 30 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

103 நதிகள் சுரகிமு கங்கா திட்டத்தின் ஊடாக 6 மாத காலத்திற்குள் அபிவிருத்தி செய்யப்படும். நதிகளை பாதுகாக்கும் பொறுப்பும், அதிகாரமும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும். - என்றார்.

# காடழிப்பு தொடர்பாக ஆராய்வதற்கு கடற்படை, விமானப்படை வீரர் குழு

## அமைப்பு என்கிறார் வீரசேகர



காடழிப்பு சம்பவங்கள் குறித்து ஆராய கடற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சுற்றுச்சூழலை அழித்து வந்தவர்கள் தற்போது தனியார் நிலங்களில் மரங்களை வெட்டுவதைக் கூட பெரிய சுற்றுச்சூழல் பேரழிவு என கூறிவருவதாகவும் அவர் சாடினார்.

கொலன்னாவையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியைப் போல சுற்றுச்சூழலை நேசிக்கும் எவரும் இல்லை என்று குறிப்பிட்ட சரத் வீரசேகர, பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில் சுற்றுச்சூழலை அழகுபடுத்த அவர் பணியாற்றினார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் சுற்றுச்சூழலை அழிப்பது என்பது நாட்டிற்கு இழைக்கும் துரோகம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

எனவே காடழிப்பு மற்றும் சுற்றுச் சூழலை பாதிக்கும் வகையில் செயற்பட்ட அனைவரையும் கைது செய்து, அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குமாறு ஜனாதிபதி குறித்த குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

# கொழும்பில் 3 ஏக்கரில் கஞ்சா பயிர்ச்செய்கை

## மூவர் கைது

*கொழும்பு, மார்ச் 30*

*கொழும்பில் விசேட அதிரடிப்படையினர், குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சுற்றிவளைப்புக்களில் 3 ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதோடு, ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த சுற்றிவளைப்புக்கள் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தவை வருமாறு -*

*விசேட அதிரடிப்படையினரால் பாணம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் 3 ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*எனினும் இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளமையால் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

*தப்பிச் சென்றுள்ள குறித்த சந்தேகநபர்கள் வசித்த இடத்திலிருந்து 5 தொலைபேசிகள், 5 கிலோ கிராம் கஞ்சா மற்றும் உள்நாட்டு துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இதேவேளை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் பேலியகொடை - நுகேபார பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 205 கிராம் ஹெரோயின், 306 கிராம் கஞ்சா, 48 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மேலும் கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 7 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

# கிளி. கரைச்சி பிரதேச சபை ஆதனவரி அலுவலகம் திறப்பு

கரைச்சி பிரதேச சபையால் ஆதனவரி அலுவலகம் நேற்று (திங்கட்கிழமை) காலை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சின்மயா மிஷன் சுவாமிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந. பிரபாகரன், கிளிநொச்சி மக்கள் வங்கியின் முகாமையாளர் க.பிரதீப், சபையின் உபதவிசாளர் தவபாலன், சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி சந்தைச்சேவகர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த அலுவலக கட்டடத் தொகுதி 55 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனத் தடுப்பூசிகள் நாளை வந்தடையும்

சீனாவில் தயாரிக்கப்படும் சைனோஃபார்ம் கொவிட் தடுப்பூசிகள் நாளை புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளன என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கொவிட் தடுப்பூசி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அதற்கமைய முதற்கட்டமாக 6 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சைனோஃபார்ம் தடுப்பூசிகளுக்கு இலங்கையின் அவசர பயன்பாட்டுக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை அதிகாரசபை அனுமதியளித்துள்ளதாகவும் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

இதே வேளை ரஷ்யாவில் தயாரிக்கப்படுகின்ற ஸ்புட்னிக் தடுப்பூசிகளும் விரைவில் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முதற்கட்டமாக 70 லட்சம் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விரைவில் இந்த தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று லலித் வீரதுங்க மேலும் தெரிவித்தார்.




# சினமன் எயார் உள்நாட்டு விமான சேவை ஏப்ரல் முதல்

இலங்கையின் முதன்மையான உள்நாட்டு விமான நிறுவனமான சினமன் எயார், ஏப்ரல் முதலாம் திகதி முதல் தனது உள்நாட்டு பட்டய விமான நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கவுள்ளது.

கொவிட் தொற்றின் காரணமாக பல மாதகால இடைவெளிக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், ரத்மலானை விமான நிலையம் மற்றும் கொழும்பு நகரம் ஆகியவற்றிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு (பாசிக்குடா), அம்பாந்தோட்டை, தங்காலை, கோகல்ல, கண்டி, காஸ்டில்ரீக், சீகிரிய, யாழ்ப்பாணம், அறுகம்பை, அநுராதபுரம் மற்றும் பெந்தோட்டை ஆகிய பகுதிகளுக்கு இந்த விமான சேவை முன்னெடுக்கப்படுகிறது.

விமான நிறுவனம் மிக உயர்ந்த பாதுகாப்பை வழங்க உறுதிபூண்டுள்ளதுடன், அனைத்துப் பயணிகளும் சுகாதார மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org